
# தமிழ் நூல் வெளியீட்டு – விநியோக அமையம்

புத்தக கையேடு -1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நூல் வெளியீட்டு – விநியோக அமையம்

**Tamil Publication and Distribution Network**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நூல் வெளியீட்டு – விநியோக அமையம்: புத்தகக் கையேடு – 1.
பதிப்பு: ஜூன் 1995.
ஒளி அச்சுக் கோர்வை: Parkar computers, madras 14.
விலை: ரூபா. 3.00

தொடர்புகள் : Contact :

**TAMIL PUBLICATIONS &**
**DISTRIBUTION NETWORK**
4, 3RD FLOOR, C.C.S.M. COMPLEX,
COLOMBO - 11, SRI LANKA.
TP: 335844
FAX: 94-1-333279

**VASANTHAM BOOK HOUSE**
405, ARUCHUNA VEETHY
JAFFNA, SRI LANKA.

**SOUTH ASIAN BOOKS**
6/1 THAYAR SAHIB STREET
2ND LANE MADRAS - 600 002. TAMIL NADU, INDIA.

Printed at AIM ✆ : 044-493 5663, 044-493 4271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நூல் வெளியீட்டு
விநியோக அமையம்

வணக்கம்.
வாருங்கள்.
அன்புடையீர்,

நாம் எமது புத்தகக் கையேடு–1 இன் மூலம் உங்களைச் சந்திப்பதில் உவகையடைகின்றோம். உங்கள் வரவு எமக்கு உற்சாகமளிக்கிறது – உற்ற துணையாய் அமைகிறது.

இந்தப் புத்தகக் கையேடு–1 இல் எமது நூல் வெளியீட்டின் ஸ்தாபன அமைபபாகிய தேசிய கலை இலககியப பேரவை, புதியபூமி வெளியீட்டகம ஆகியவற்றின் நூல்கள் மட்டுமே இணைக்கபபட்டுள்ளன.

ஒலி – ஒளிப்பேழை இணைப்பில் AVA நிறுவனம், தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏசியன் புக்ஸ், நண்பர் வீ. திவ்வியராஜா, ஒஸ்ரேலியா பாரதி பள்ளி ஆகியவற்றின் படைப்புகள் மட்டுமே உள்ளன.

புத்தகக் கையேட்டை தொடர்ந்து வெளியிட நாம் விரும்புகின்றோம். எனவே படைப்பாளர்களும் வெளியீடுகளில் ஏனைய படைப்பாளர்களும் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டுகிறோம்.

தமிழ் நூல் வெளியீட்டு – விநியோக அமையம்

# புத்தகப் பண்பாட்டை நோக்கி சில வார்த்தைகள்.....

**புத்தகப் பண்பாட்டை நோக்கி**
**சில வார்த்தைகள்:**

தமிழ்ப் பண்பாட்டில் எழுத்தறிவித்தல் மிக உன்னத இடத்தை வரலாற்றில் பெற்றிருந்தது. விதேசியப் படையெடுப்புகளாலும்– பண்பாட்டு ஆக்கிரமிப்புகளாலும் பாழடிக்கப்பட்டது – பாழடிக்கப் படுகின்றது.

பல்லினப் பண்பாட்டில் பரந்து வாழும் தமிழ் சமூகம் பாரம்பரிய பிரதேசங்களில் தனித்துவம் வேண்டிப் போராடும் சமூகம் – தன்னடையாளங்களை நிலைநிறுத்தி தனது பண்பாட்டு விழுமியங்களை மீட்டெடுக்கவும், மானுடப் பண்பை மேம்படுத்தி மறுமலர்ச்சியுகம், காண்பதற்கும் பண்பாட்டுப் புரட்சியின் அவசியம் எம்மை அழுத்தி நிற்கிறது.

பாரதி ஆரம்பித்து வைத்த மறுமலர்ச்சிப் பயணம் பாதி வழியில் தடைப்பட்டு நிற்கிறது.

"இரண்டாயிரம் ஆண்டுப் பழைய கமை எங்களுக்கு, பண்பாட்டின் பேராற் பலசோலி எங்களுக்கு" என கவிஞர் முருகையனின் ஆதங்கம் புரிகிறதல்லவா எமக்கு!

இருபதாம் நூற்றாண்டு தனிமனிதனை – குடும்பத்தை – சமூகத்தை வேரும் வேரடி மண்ணுமாக இடம் பெயரச்செய்து வேடிக்கை பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும், நகரங்களிலிருந்து நாடுகளுக்குமாக மனிதன் தாவிக் கொண்டிருக்கின்றான்.

இடம், காலம், தூரம் மனித உறவுகளைச் சின்னாபின்னப் படுத்தி விடுகிறது. ரெலிபோன், ஃபாக்ஸ், கூரியர், கொம்பியூட்டரை நம்பியே உறவுகள் தவிக்கின்றன — தத்தளிக்கின்றன.

தகவல்கள் — கருத்துகளை பத்திரிகை, தொலைக்காட்சியூடாக வணிக பொருளாதார விருத்தி வேண்டும் வல்லாண்மைச் சக்திகளே எமக்கு அன்றாடம் 24 மணி நேரமும் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

மேலாளர் ஆகிய அவர்களே எமக்கான உணவு, உடை, ஆபரணம், என்பவற்றைத் தீர்மானிக்கின்றனர். அது மட்டுமல்ல, எமக்காகச் சிந்திக்கவும் செய்கின்றனர். எமது மூளை முழுவதும் அவர்களே நீக்கமற நிறைந்துள்ளனர். நாம் சிந்திக்கிறோம் — உரையாடுகிறோம், உண்கிறோம், உடுக்கிறோம், உறவாடுகின்றோம் — செயல்படுகிறோம் அம்மேலாளர் சிந்தைப்படி !!

எமது பண்பாடு புடவைக்கடையிலும் நகைக்கடையிலும் மூச்சு விடுகிறது. புத்தகக் கடைகள் போட்டிப் பரீட்சைப் பயிற்சிகளில குழந்தைகளை — சிறுவர்களை — மாணவர்களை முடங்கச் செய்து விடுகின்றன. சினிமா விரதத்தில் சீராட்டுகின்றன.

இந்நிலைக்கு நாம் ஆட்படத்தான் வேண்டுமா ?

தொடர்வதை நாம் ஏறகத்தான் வேண்டுமா ?

**புதிய கலை - இலக்கியம்.**
**புதிய பண்பாடு.**
**புதிய வாழ்வு.**

ஆம், ஆளுமை பெற்ற மனிதர்களின் வரவுக்காய் சிந்திப்போம். செயற்படுவோம். சேர்ந்துழைப்போம்.

புத்தகப் பண்பாட்டை மேம்படுத்த எழுத்தாளர் — வெளியீட்டாளர் — வாசகர் மத்தியிலான முக்கூட்டுச் செயற்பாட்டை முனைப்பாக்குவோம்.

**தமிழ் நூல் வெளியீட்டு - விநியோக அமையம்**



## அது அவர்கள்

**முருகையன்**

பதிப்பு: ஜூலை, 1986. ரூபா : 10.00

மரபுவழிக் கவிஞராயினும் அவரது சிந்தனை நவீனத்துவம் சார்ந்தது. அவர் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் நம்பிக்கை மிகுந்தவர். அவரது சிந்தனை நவீனத்துவம் சார்ந்தது. அவரது கவிதைகளில் அவரது பார்வையின் நவீனத்துவத்தை அடையாளம் காண்பதில் நமக்குச் சிரமம் இல்லை. சிந்தனையின் நவீனத்துவம் மரபின் வலிமையுடன் சேர்ந்து செயற்படலாம் என்பதற்கு அவரது கவிதைகள் ஆதாரந் தருவன.

அது — அவர்கள் என்ற கவிதை நூலில் அவர் கூற முயலும் பொருள் நவீன சிந்தனை சார்ந்தது. கதை சொலலும் பாங்கில் அவர் தன் கருத்துக்களை விருத்தி செய்து கொண்டு போகிறார். அதேசமயம் தமிழ்க் கவிதை மரபில் நீதிகளைக் கூற மிகவும் பயன் பட்டு வந்த வெண்பா வடிவத்தை அவர் தெரிந்தெடுத்தமை அவரது, கவிதை நூலின் நோக்கத்தை வலியுறுத்துகிறது என்று நினைக்கிறேன்.

— சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## செப்பனிட்ட படிமங்கள்

சி. சிவசேகரம்

பதிப்பு: பெப்ரவரி 1988. ரூபா: 7.50

கவிஞர் சிவசேகரத்தின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. இவர் தனது கவிதைகளைப் பற்றி முன்னுரையில் பேசுவதுதான் என்ன? கேட்போமா?

என் கவிதைகள், அடிப்படையில், தேடல் முயற்சிகளே. என்னையும் என் சூழலையும் அறியும் தேவையின் காரணமாக மேற்கொள்ளப்படும் தேடலில் மனதில் இடறும் எண்ணங்களே கவிதை வடிவம் பெறுகின்றன. புதிர் போடுவதோ படிப்பவர்களைக் குழப்புவதோ என் நோக்கமில்லை. சில சமயங்களில் சில நிகழ்வுகள் என் மனதில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைப் பட்டும் படாது கூறி விட்டு மிகுதியை வாசிப்பவரின் பொறுப்பில் விட்டு விடுகிறேன்.



## எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே

சண்டோர் பெட்டோவ்ஃபி

தமிழில் - கே. கணேஷ்


பதிப்பு: டிசம்பர் 1988. ரூபா: 7.00

ஹங்கேரிய தேசியக் கவிஞனும் உலகக் கவிஞனுமாகிய பெட்டோவ்ஃபி தனது நாடு அன்னியர் ஆட்சிக்குட்பட்டு அவதியுற்ற காலத்தில் பேனா ஏந்திய தன் கையால் வாளேந்தவும் தயங்கவில்லை. 1849-ல் நடைபெற்ற விடுதலைப் போரில் இருபத்தியாறே வயதில் பகைவனின் ஈட்டிக்கு இரையானான். நமது மகாகவி பாரதியாரின் கவிதைகளில் காணும் ஆவேசத்தையும் துடிப்பையும் ஒத்தன அவனது கவிதைகள்.

மரபுவழி உவமை அணிமுறைகளில் விலகி, புது உத்தியில் தனது உள்ளக் குமுறல்களைக் கவிதையாக்கினான். அவை இன்று விடுதலை வேட்கை கொண்ட பல நாட்டினரதும், உள்ளக் கனலைத் தூண்டும் போர்க் கவிதைகளாய் விளங்குகின்றன. அவ்வுலகக் கவிஞனின் பாடல்கள் சிலவற்றின் தமிழாக்கமே இந்நூல்.

## மாடும் கயிறுகள் அறுக்கும்

இ. முருகையன்




பதிப்பு: ஜூன் 1990. ரூபா: 26.00

இக்கவிதைத் தொகுதியிலே சிறு கவிதைகளும், சில நீண்ட கவிதைகளும் கடூழியம் என்ற நாடகமும் உள்ளன.

"முருகையன் பார்த்து வந்த வேலைகளும் கடமைகளும் விஞ்ஞானப் பின்னணியில் தமிழ் சம்பந்தமானவையாயும் கல்வித் தொடர்புடையனவாயும் இருந்தமை நோக்கத்தக்கது. இவற்றின் விளைவாக முருகையனது கவிதைகள் எப்பொழுதுமே ஆய்வறிவுப் பண்புடையனவாய் இருத்தல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். உணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டுப் போகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானித்து விஷயங்களை ஆழமாக நோக்கிக் கவிபாடும் நோக்கும் போக்கும் அவரின் சிறப்புயல்புகள்.

முருகையனது தத்துவ வீச்சு எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியமானவை அவர் மேற்கொண்டு வந்துள்ள கவிதை வடிவப் பரிசோதனைகள். நவீன தமிழில் காத்திரமான பரிசோதனைகளைச் செய்த கவிஞரில் முருகையனுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு."

– பேராசிரியர் க. கைலாசபதி




## தேவி எழுந்தாள்

சி. சிவசேகரம்

பதிப்பு: நவம்பர் 1991. ரூபா: 10.00

இதில் உள்ள கவிதைகளில் பெருவாரியானவை தாயகம், புதிய பூமியிலும் ஏனையவை ஒல்லாந்து – அஆஇ, ஜெர்மனி – தூண்டில், புதுமை, பிரான்ஸ் – ஓசை, சுவிஸ – மனிதம், நோர்வை – சுவடுகள், சக்தி, இங்கிலாந்து – பனிமலர், ஆகிய ஏடுகளிலும் வெளிவந்தவையாகும்.

சாதி வெறி, இனவெறி, அமைதி காக்கும் வெறி, அரசியல் வெறி ஆகியவற்றின் அனர்த்தங்களைச் சாடும் இவரது கவிதைகள், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், தியாகிகளைப் பற்றியும் பாடுகின்றன.




## தாயகம் கவிதைகள் அறுபத்தாறு

இருபத்தைந்து கவிஞர்களின் கவிதையாக்க்ங்கள்

பதிப்பு: டிசம்பர் 1991. ரூபா: 30.00

இருபத்தைந்து கவிஞர்களின் அறுபத்தாறு கவிதைகள் உள்ளன. இவையெல்லாம் தாயகம் – கலை இலக்கிய மாத இதழில் அவ்வப்போது பிரசுர மாகியவை. இவை எண்பதுகளின் அறுவடை.

தாயகம் தந்த கவிதைகள் யாவும் நிகழ் கால வரலாற்றுணர்வின் மணம் கமழ்வனவாக உள்ளன. அவை உணர்வுகளின் பதிவுகள்; நிகழ்வுகளின் அதிர்வுகள்.

உருவியல் அக்கறை குறைந்து போன நிலையில், சமூக விஞ்ஞான நெறிப்பட்ட சிந்தனையும் கருத்தியற் சார்பும் வேறொரு வகையான வளத்தினை இந்தக் கவிதைகளுக்குத் தந்துள்ளன. இந்நூல் கலைப் பெறுமதியும் பயன் பாட்டுப் பெறுமதியும் வாய்ந்து விளங்குகிறது.




## நாங்கள் மனிதர்

முருகையன்

பதிப்பு: பெப்ரவரி 1992. ரூபா: 20.00

தமிழ் இலக்கிய உலகில் ஓர் அறிஞராகவும் கவிஞராகவும் விளங்கும் முருகையனின் கவிதைகளில் இருந்து இளம் தலைமுறையினர் கற்றுக் கொள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு ஏராளம் உண்டு. அந்த வகையில் அவர் ஒரு வழிகாட்டும் கவிஞராகவும் திகழ்கின்றார்.

இக்கவிதைத் தொகுதியில் ஏறத்தாழ முப்பதாண்டு காலத்துக்கு மேலாக முருகையன் இயற்றிய தனிப்பாட்டுகள் உள்ளன. இவை தனிப்பாட்டுகளே யாயினும் ஒரே படைப்பாளியின் ஆக்கங்கள் என்ற முறையில் உள்ளார்ந்த தொடர்புகளை உடையன. ஆனால் பல்வகைப் பண்பு படைத்தனவாயும் உள்ளன. இக்கவிதைகள் எல்லாம் மனித குல மேம்பாட்டை நோக்கிய உள்ளுந்தல் களாகவும் தேடுதலாகவும், விசாரணை யாகவும், அங்கலாய்ப்புகளாகவும், தேற்றமாகவும், தெளிகையாகவும், உறுதியாகவும் உள்ளன. இடையறாத பரிசீலனைகளின் ஆவணங்களாகவும் அமைகின்றன.



## குன்றத்து குமுறல்

*சி. சிவசேகரம் – இ. தம்பையா*
*– சிவ. இராஜேந்திரன்*
*– எஸ். பன்னீர் செல்வம்.*

பதிப்பு: மே 1993. ரூபா: 13.00

இந்திய வம்சாவழியினர், மலையக மக்கள் என அழைக்கப்படும் தனித்துவ அம்சங்கள் பொருந்திய ( இலங்கைத் தமிழ் தேசிய இனத்திலிருந்து வேறுபட்ட குணாம்சங்களை உடைய) சிறுபான்மை இனம் ஒன்றின் குரல் கவிதைகளாய் இங்கே வடிக்கப்பட்டுள்ளது.

மலையகத்து இலக்கிய இதயத் துடிப்பைப் பட்டவர்த்தனமாக , அவை பதிவு செய்துள்ளன.

## பணிதல் மறந்தவர்

*ஒடுக்கு முறைக்கு எதிரான*
*மூன்றாம் உலகக் கவிதைகள்*

*சி. சிவசேகரம்*




பதிப்பு: ஒகஸ்ற் 1993. ரூபா: 12.00

இத் தொகுதியில் உள்ள பெருவாரியான கவிதைகள் இன ஒடுக்கலுக்கும் ஏகாதி பத்தியவாதிகளின் சுரண்டலுக்கும் – ஒடுக்குதலுக்கும் உட்பட்ட எந்தச் சமுதாயத்தினரும் எளிதாக உறவு கொள்ளக் கூடியவையாகும்.

நாட்டுக்குழைத்திடவும், நலம் ஓங்கிடு மாறு வருந்திடவும் "போரிட நின்றிடும் போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞான"த்தைக் கண்டிட வும் பயன்படத்தக்க வகையில் பல் நாட்டுக் கவிஞர்களின் வாழும் கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மனித வரலாற்றில் "பணிதல் மறந்தவர்" பலரது வாழ்வுப் பணிகளே மாற்றுப் பண்பாட்டு நெறிகளாக மாறி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஏகலைவ பூமி

*சி. சிவசேகரம்*

பதிப்பு: மார்ச் 1995. ரூபா: 10.00

இத்தொகுதியில் கவிதைகளில் இசைக்கப்படக்கூடிய மூன்று உள்ளன. இன்னுமொன்று சீரான மரபு சார்ந்த சந்த வடிவிலானது. மற்றையவை வடிவில் மரபுடன் எளிதாக உறவு காட்ட முடியாதவை. பெண்கள் நிலை தொடர்பான கவிதைகள் புவனம் என்ற புனை பேரில் (கனடா) தாயகத்தில் வெளியானவை. அந்தப் பேர் என் அம்மாவுடையது. பெண்கள் நிலை பற்றிய கவிதைகட்கு அந்தப் புனை பேரின் தெரிவு பலவழிகளிலும் பொருத்தமானதுதான். இக்கவிதைகளுட் சர்வதேச நிலவரங்கள் தொடர்பானவை சில(நோர்வே) சுவடுகளிற் பிரசுரமானவை. இம்முறை காதற் கவிதை ஒன்றும் உள்ளது. இரண்டு வருடம் முன்பு பாரிஸிலிருந்து வந்த பாரிஸ் முரசு வார ஏட்டில் பிரசுரமான ஒரு கவிதையும் (ஒல்லாந்து) அ.ஆ.இ.வில் வந்த ஒன்றும் இங்குள்ளன, நான் விரும்பியதை விடக் குறைவாகவே தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகத்தில் எழுத முடிந்தது. இத் தொகுதியின் இரண்டு கவிதைகளை மட்டுமே அதிற் பிரசுரமாயின.

—சிவசேகரம்

இந்நூல் இவரது ஐந்தாவது கவிதை வெளியீடாகும்.



## நதிக்கரை மூங்கில்

*சி. சிவசேகரம்*




முதற் பதிப்பு டிசம்பர்,1983. ரூபா 10.00
*(காவ்யா வெளியீட்டகம்)*
*இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1995.*

கவிஞர் சிவசேகரத்தின் முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். அதன் நயப்புக் கருதி மீண்டும் இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது.

புது வரலாறும் நாமே படைப்போம் இசைப்பா அரங்கின் ஒலிப்பேழை வெளியீட்டில் இசையமைப்பாளர் கண்ணனின் இசை மெட்டில் சித்திரையில் மாவலி, மாவலியின் மார்கழியில் , ஓரிரவு, ஹிற்லர் டயரிகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

"பாட்டன் பரம்பரை" என்ற கவிதை, கவி உரை வீச்சு – இசைப்பா – அரங்க நிகழ்வு ஆக முப்பரிமாணப் பரிசோதனை நிகழ்வாக காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் அரங்கேறியது.




## விலங்கிடப்பட்ட மானுடம்

*சுல்பிகா*

பதிப்பு: ஏப்ரல் 1995. ரூபா: 8.00

விலங்கிடப்பட்ட மானுடம் என்னும் இக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் சுல்பிகா சமூகப் பிரக்ஞை கொண்ட ஈழத்துப் பெண் கவிஞர் வரிசையில் எண்பதுகளின் பிற்பகுதியில் வந்து சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர், சுமார் பத்து ஆண்டுகாலம் விஞ்ஞான ஆசிரியையாகப் பணி புரிந்தவர். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா பட்டமும் பெற்ற இவர் தற்போது இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தில் செயல்திட்ட அதிகாரியாகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் அதிதி விரிவுரையாளராகவும் பணிபுரிகிறார்.

பெண்களின் முன்னேற்றம், விஞ்ஞானக் கல்வி, கல்விச் சிந்தனைகள் என்பன தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகளும் எழுதி வரும் இவர், கவிஞராக மட்டுமன்றி ஓர் ஆய்வறிவாளராகவும் முகிழ்த்துள்ளார். இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் ஈழத்துப் பெண் கவிஞர் வரிசையில் கல்பிகாவுக்கு ஓர் முக்கிய இடம் உண்டு என்பதை உறுதிப் படுத்துகின்றன.

இது கவிஞரின முதல் தொகுப்பு.

– எம். ஏ. நுஃமான்




## பாம்பு நரம்பு மனிதன்

சோலைக்கிளி

பதிப்பு: ஜூன் 1995. ரூபா: 25.00

சமகாலத் தமிழ்க் கவிதை பற்றி அக்கறையுடையோர் மிகவும் அறிய வேண்டிய ஒரு கவிஞரின் படைப்புக் களைப் பற்றி எழுத முற்படுகின்றேன்..

நுஃமான் 1988–ம் ஆண்டு எழுதிய தனது முன்னுரையில் சோலைக்கிளி வெளிப்பாட்டு முறையும் அலாதியான புதுப்புதுப் படிமங்களையும் குறிப் பிட்டிருந்தார்... சோலைக்கிளியின் கவிதையில் ஒருவிதமான சந்த ஒழுங்கைக் காணலாம். அது சீர்ப்படுத் தப்பட்ட பேச்ச மொழியின் சந்தம்.....

அவருடைய கவிதைகள் மிகவும் தன்னுணர்வு சார்ந்தவை. ஒரு புறம் அவரது தனிப்பட்ட அனுபவங்களதும் அந்தரங்க உணர்வுகளதும் வெளிப் பாடாகவும் மறுபுறம் தன்னைச் சூழவுள்ள சமுதாயத்தின் அதிவேகமான சீரழிவின் மீதான கோபத்தின் வெளிப்பாடாகவும் அவரது கவிதைகள் அமைகின்றன.

– சி. சிவசேகரம்
காகம் கலைத்த கனவு– சில குறிப்புகள்
– சரிநிகர்–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரம்படி

க. தணிகாசலம்

பதிப்பு: ஜூலை 1988. ரூபா: 17.00

பிரம்படி என்பது, இராணுவ அழிப்புக்கு உட்பட்ட ஈழத்துச் சிற்றூர் ஒன்றின் பெயர். அத்துடன் காந்தீய ஆன்மிகவாதி ஒருவரின் மனத்தில் ஏற்பட்ட தாக்கமும்தான். அந்தத் தாக்கம் ஒரு பிரம்படி அல்ல, ஆயிரம் பிரம்படிகள்.

இவ்வாறாக இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் அண்மைக் கால வரலாற்றுச் சூழலியே தோய்ந்து நின்று எழுதப்பட்ட இக்கதைகளில் பொருளுருவமும் மொழியுருவமும் அன்பர் தணிகாசலத்தை நல்லதொரு சிறுகதை எழுத்தாளராக நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றன. தணிகாசலம் கதை எழுதும் கலையினை எந்தவொரு பள்ளிக்கூடத்திலோ, பல்கலைக் கழகத்திலோ பயின்று படித்துப் பட்டம் பெற்ற ஒருவர் அல்லர். அனுபவமே அவருடைய பள்ளிக்கூடம். அனுபவமே அவருடைய தகுதிப்பாடு.

வறுமையும் பிணியும் வருத்தமும் வாய்ப்பின்மையும் பீடித்த மக்கட்பிரிவின் மீட்சிக்காகவும் விடுதலைக்காகவும் விமோசனத்துக்காகவும் உழைக்க வேண்டும் என்னும் வேட்கை அவரிடம் நிரம்ப உண்டு. அந்த வேட்கையினால் உந்தப்பட்டு, அந்த வேட்கையின் சுவாலையாகச் சொரூபங் கொண்டுள்ள இந்தக் கதைகள், நிகழ்கால இலங்கைக் கலைஞன் ஒருவனின் வேள்வியிலே பிறப்பெடுத்தனவை.

– இ. முருகையன்




## கூனற்பிறை

(சீனக் குறுநாவல்)

லாவ் ஷா
தமிழில் கே. கணேஷ்

பதிப்பு: மார்ச் 1990. ரூபா: 10.00

1899–ல் சீனப்புத்தாண்டு நாளன்று லாவ்ஷ் பிறந்தார். சிங்கன் என்பதே அவர் இயற்பெயர். லாவ்ஷ் புனை பெயராகும். 1924ல் லாவ்ஷ் இங்கிலாந்து சென்று பகுதி நேர ஊழியம் புரிந்து கல்வி பயின்றார்.




இவரின் நெடுங்கதையான கூனற் பிறை தற்காலச் சீன இலக்கிய வரிசையில் பெய்ஜீங் பிற மொழிப் பதிப்பகத்தார் வெளியிட்ட 'தற்காலச் சீன புனை கதைகளின் தலை சிறந்த படைப்புகள் 1919–1949' என்ற ஆங்கிலத் தொகுப்பில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

இந்நூல், பதிப்பகத்தார் வெளியிட்ட Crescent Moon ஆங்கிலத் தொகுப்பில் முன்னுரை எழுதிய லாவ்ஷவான ஹு"ஜிகிங் அம்மையாரும் ஆசிரியருக்குப் பிடித்த மூன்று கதைகளில் கூனற் பிறை ஒன்றாகும் எனக் குறிப்பிட்டார். முப்பதுகளில் சீனத்து வறுமையினை உணர்த்துவதாகவும், விபச்சாரத்தை காமக் கவர்ச்சிகளிலிருந்து பிரித்து வறுமையின் வேர்களில் பீடித்திருப் பதாகவும் இந்நூல் காட்டுவதால் முக்கியத்துவம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இளைஞன் எர்கையின் திருமணம்


(சீனக் குறுநாவல்)

ஜௌ ஞலி
தமிழில்: கே. கணேஷ்

பதிப்பு: மார்ச் 1990. ரூபா: 6.00

ஜௌ ஞலி திறன்மிக்க ஆற்றல் படைத்த சீன எழுத்தாளர்களில் ஒருவர். கோமிந்தாங் எதிர்ப்படைகள் விரட்டப் பட்டு மக்களாட்சி நிறுவப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதிகளின் வாழ்க்கைப் போக்கைச் சித்தரித்தார். புதிய அறிவு பூர்வமான எண்ணங்களுக்கு பிற்போக் கான நிலக்கிழார் முறையின் எண்ணங் களுக்குமிடையே தோன்றிய முரண் பாட்டுப் போராட்ட நிகழ்வுகளை நகைச் சுவையுடன் வரைந்தார். சமூகச் சிக்கல்களை மக்கள் வழக்கிலுள்ள பேச்சு மொழிகளிலேயே மென்மையாகப் படாடோபமின்றி எழுதினார். அவரது சிறுகதைத் தொகுதியை மொழி பெயர்த்த பொழுது பெருமகிழ்ச்சியுற்றேன்.

— சிட்னி ஷெப்பிரோ
**(Sidney Shapiro)**




## ஏன்?


எஸ். என். வாகீசன்

பதிப்பு: நவம்பர் 1991. ரூபா:18.00

1983–இல் எழுதிய ஒரு சிறுகதையையும் 90–91–ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஏனைய கதைகளையும் உள்ளடக்கியது இத் தொகுதி.



எதிர்பாராத ஒரு அரசியல் திருப்பு முனையில் அகப்பட்டு, மாறிவரும் சூழல் மீது ஆளுமையின்றி, அம் மாற்றங் கட்கேற்ப வளைந்து கொடுக்கும் நிர்ப்பந்தத்திற்கும் நெடுங்காலம் பழகிய ஒரு வழக்கின் பிடிப்புக்குமிடையிற் தத்தளிக்கும் ஒரு சமுதாயத்தை, அதில் வாழும் தனிமனிதாது நிலைமைகளூடு, முற்போக்கான ஒரு கோணத்திலின்று காணும் ஒரு படைப்பாளியின் பார்வையின் சில தெறிப்புகள் இச்சிறுகதைகள்.






## மூங்கிற் பள்ளம்

வியத்னாமியக் கதைகள்

(தமிழில் கே. கணேஷ்)

பதிப்பு: ஒகஸ்ற் 1992. ரூபா: 8.00

1954 ஜூலை 20–ல் ஜெனிவா உடன்படிக்கையின்படி வடக்கு தெற்கு எனப் பிளவுபட்ட வியட்னாமில் தேர்தல் நடாத்தி ஒன்றுபடுத்தும் முயற்சியை அமெரிக்காவும் அதன் பொம்மை அரசாங்கமும் நிறைவேற்றவில்லை.

இச்சரித்திரப் போராட்ட காலத்தில் ஹோசிமின் தலைமையில் ஒன்றுபட்டு விடுதலைக்காகப் போராடியபோது எழுந்த சிறுகதைகளும், பிறகதைகளுமான ஐந்து வியட்னாம் விடுதலை எழுத்தாளர்களின் கதைகள் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உடலும் உணர்வும்

### ஒரு மந்தையோட்டியின் கதை

– ஹாங்சியான் லியாங்
– தமிழில் கே. கணேஷ்

பதிப்பு: செப்டம்பர் 1992. ரூபா: 16.00

சீன வரலாற்றின் முக்கிய கால கட்டத்தினை வெளிக்காட்டும் பலகணிகளாக ஷாங்கின் இரு படைப்புகளான உடலும் உணர்வும் (ஒரு மந்தை யோட்டியின் கதை) கைப்பு ஊற்று (ஒரு பாரப் பேருந்து ஓட்டுனரின் கதை) அமைந்துள்ளன.

கெடுபிடிகளுக்கு இடையேயும் தர வேற்றுமைகளைக் கடந்து மனிதப் பண்புகள் மேலோங்கி விளங்குவதையும் அதன் விளைவாக எழும் உயர் பண்பான அசைக்க முடியாத தியாக உணர்வுகளையும் இரு கதைகளும் உணர்த்துகின்றன.

அறிஞர்கள் கணிப்புகளையும் மீறி மாறிவரும் இன்றைய உலகச் சூழ்நிலையில் அரசியல், கலை, இலக்கியத் துறைகளிலும் இன்று ஒரு ஆய்வுக் களமாகத் திகழும் சீனத்தின் படைப்புகள் வாசகர்களுக்கு ஒரு அனுபவத் திறவுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை.



## அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்

நந்தினி சேவியர்

பதிப்பு: ஓகஸ்ற் 1993. ரூபா: 12.00




நந்தினி சேவியர் சிறுகதைகளைத் தொகுத்து ஒரு நூலாகக் காணும் வாய்ப்பு இப்பொழுது நமக்குக் கிட்டியுள்ளது. ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர் கதை எழுதும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். அவரது கதைகள் இலங்கைத் தமிழகத்தின் இலக்கிய ஏடுகளான அலை, தாயகம், புதுசு, மல்லிகை, வாகை என்பவற்றிலும் ஈழநாடு, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளிலும் இடம்பெற்றுள்ளன.

இந்த இடத்திலே ஓர் உண்மையை அழுத்திக் கூறிவைத்தல் பொருத்தமாய் இருக்கும். நந்தினி சேவியரின் கதைகள் ஆயிரத்தில் ஒருவரான அற்புதத்தனியாள் ஒருவரைப்பற்றியோ, அவருடைய விசித்திர குணாதிசயங்களைப் பற்றியோ பேசிவிட்டு நிறுத்திக் கொள்ளும் தன்மை உடையன அல்ல. கால ஓட்டத்திலே இடையீடின்றி மாறிக் கொண்டிருக்கும் வாழ் நிலைகளின் இயக்கத் திசைகளை நுணுக்கமாக நோக்குவதற்கு நமக்கு உதவி செய்யும் வல்லமை வாய்ந்த கருவிகள் அவை. அதனாலேதான், இந்தக் கதைககளை வியக்க வைக்கும் சாதனைகளாக நாம் இனம் காண்பது இல்லை. நமது அனுபவ விரிவுக்கும் வாழ்க்கை விளக்கத்துக்கும் துணை போகும் திறன்கொண்ட – நயந்துதிளைப் பதற்கேற்ற ஏதுக்களை நிறையவே கொண்டுள்ள – சீரிய படைப்புகளென உணர்ந்து போற்றுகிறோம்.

– முருகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெட்டுமுகம்

இணுவையூர் சிதம்பர
திருச்செந்திநாதன்

பதிப்பு: ஒகஸ்ற் 1993. ரூபா: 20.00

ஈழத்தின் முன்னணி இதழொன்றில் – வீரகேசரியில் – 1980–90 காலப் பகுதியில் பிரசுரமான பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு ஆகும்.

நவீன தமிழிலக்கியத் துறைகளில் சமூகப் பொறுப்புணர்வுடனும் அயரா ஊக்கத்துடனும் செயற்பட்டு வரும் ஈழத்து எழுத்தாளர்களில் தனிக் கவனத்துக்குரியவர்களுள் ஒருவராகத் திகழ்பவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் 1970களில் அடியெடுத்து வைத்தவர்.

சமகால ஈழத்தின் ஒரு வெட்டுமுகப் பார்வை என்ற வகையில் தனிக் கணிப்புக்குரிய ஒரு ஆக்கம் இது எனலாம்.

– கலாநிதி நா. சுப்பிரமணியன்




## ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்

நீர்கொழும்பூர் முத்துலிங்கம்

பதிப்பு: மார்ச் 1994. ரூபா: 20.00

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். அவரது எழுத்தோவியங்கள் கவிதைகளாக, சிறுகதைகளாக, நாவல்களாக வெளி வருபவை.



இவரது ஆக்கங்கள் ஆரவாரமில்லாதவை. ஆனால் அப்படைப்புகள் மௌனமாகவே வாழ்க்கையையும் மனிதரையும் கூர்மையாக நோக்குகின்றன. நிகழ்வுகளுக்கேற்ப உண்டாகும் உணர்ச்சிகளை, உணர்ச்சி பேதங்களை கலை நயத்துடனும் சித்தரிக்கின்றன. இவரது படைப்புகளில் ஒரு நாவலும் ஐந்து சிறுகதைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஒரே வார்த்தையில் அருமையான கதைகள். வகை மாதிரியான பாத்திரங்களையும் நிகழ்வுகளையும் கலைதரக்கூடிய இலக்கியமாக்கியுள்ளார்.

– சுபைர் இளங்கீரன்

## மோகவாசல்

ரஞ்சகுமார்

இரண்டாம் பதிப்பு: எப்ரல் 1995 ரூபா: 24.00




சிறுகதைத் துறையில் 1983–இல் ஏற்பட்ட புதிய உணர்முறையைச் சித்தரித்த புதிய தலைமுறையினருள் ரஞ்சகுமாருக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

ஈழத்து தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் ரஞ்சகுமார் பெறும் முக்கியத்துவத் துக்கான காரணம், அவர் இலங்கையில் 1983 உடனும் அதன் பின்னும் வரும் அனுபவங்களுக்கு வழக்கில் உள்ள இலக்கிய அமைவு ஆகும். இந்த இலக்கிய அமைவினுள் ஒரு புதிய தலைமுறையின் உணர் முறைமை, நோக்கு முறைமை ஆகியன பளிச்சிட்டு நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் எழுதத் தொடங்குவதும், சிலர் பிரச்சார வாடைப்பட எழுதுவதுமான இளைஞர் தீவிரவாத எழுச்சியை ரஞ்சகுமார் இலக்கியமாக்கியுள்ள முறைமை அற்புதமானது.

– கார்த்திகேசு சிவத்தம்பி




## ஒளி பரவுகிறது..

*திக்குவல்லை கமால்*

பதிப்பு: மே 1995. ரூபா: 30.00

1890–ஆம் வருடம் சித்தி லெப்பை எழுதிய அசன்பேயின் சரித்திரம் என்ற நாவல், இலங்கையின் தமிழ் இலக்கிய உலகில் ஆரம்பித்து வைத்த ஆரோக்கியமான நூறாண்டு சரித்திரத்திலே, இன்னுமொரு மதிக்கத் தகுந்த நாவல் ஒளி பரவுகிறது.. ஆகும்.

இது தொழிலாளரின் நாவல்; அதிலும் இளம் யுவதிகள் பங்கு கொள்ளும் "வேஜி" நெசவுத் தொழிற்சாலையை முக்கிய களமாகக் கொண்டு எழுதப்பட்ட படைப்பு. இளமையும் குதூகலமும் நேசமும் பாசமும் சிந்தனையும் பக்குவமான போராட்டமும் இதில் உணர்வு இழைகளெனப் பின்னப் பட்டுள்ளன.

இந்தச் சிறிய நாவலில் இயற்கையான ஒரு நாடகக் காட்சி அமைப்பு அத்தியாய வரிசையில் உண்டு. இதனைத் தொலைக் காட்சியில் தொடர் நாடகம் எழுதும் ஆசிரியர்கள் பயன்படுத்தினால் தமிழ் மக்கள் அந்தப்பயனையும் அடைவார்கள்.




தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாவல் புதிய அனுபவத்தைத் தரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

– நந்தி

இந்நாவலே, தேசிய கலை இலக்கியப் பேரவையின் நாவல் வெளியீட்டில் முதலாவதாகப் பிரசுரமாவதாகும்.

## சட்டநாதனின் கதைகள்

*க. சட்டநாதன்*




பதிப்பு ஜூலை: 1995. ரூபா: 45.00

மென்மையான உணர்வுகளை கலை நயத்தோடு மனித நேயத்தோடும் வெளிப்படுத்துவதில் ஆசிரியர் வெற்றி பெறுவதால், ஈழத்துச் சிறுகதை உலகில் சட்டநாதன் தனது தனித்துவத்தை நிலை நாட்டியுள்ளார்.

ஏ. ஜே. கனகரத்தினா

சட்டநாதனுடைய கதைகளில் கோஷங்கள் இல்லை. சுலோகங்கள் இல்லை. ஆயினும் அவை பிரசாரம் செய்கின்றன.. எது சரி, எது பிழை என்று தன்னை நீதவானாக்கித் தீர்ப்பு வழங்காமற் கதைப் போக்கில் நியாய அநியாயங்களை அழகாக உணர்த்துகிறார்.

சி. சிவசேகரம்

மிகக் குறைவான கதைகளையே எழுதி, நிலையான இடத்தைப் பெற்றுவிட்ட சட்டநாதன் அவர்கள் இன்றைய ஈழத்துச் சிறுகதையின் உயர் தரத்துக்கு ஒரு உரைகல் ஆகக் கொள்ளத் தக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவலில் அவர் பதித்துள்ள முதலாவது அடி எதிர்காலத்தில் அவர் நிகழ்த்தக்கூடிய சாதனைகளுக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது.

நா. சுப்பிரமணியன்



## கதை முடியுமா?

க. தணிகாசலம்

பதிப்பு : ஜீலை 1995. ரூபா: 25.00

இது தணிகாசலத்தின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி. இதற்கு முன் வந்தது பிரம்படி. அவரது சிறுகதைகளின் சிறப்பான பண்பு அன்றாட வாழ்வின் எளிமையான நிகழ்வுகள் மூலமும் அந்த நிகழ்வுகள் மனித மனங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களின் மூலமும் மிகவும் சிக்கலான ஒரு வாழ்க்கைச் சூழலைத் தெளிவுபடச் சித்தரிப்பது என்பேன்.

இளம்பிராயத்துப் பிள்ளைகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்ப்பது என்ன என்பதையும் மனிதரது இறுகிப் போன சமுதாயப் பார்வையை இளக்கிப் புதிய திசைகளில் அதைச் செலுத்துவது எது என்பதையும் அரசியலில் அக்கறையே இல்லாது, தானுண்டு தன் குடும்பமுண்டு என வாழ்ந்தவர்களையும் விடுதலைப் போராட்ட அரசியலில் ஈடுபடுத்துவது எது என்பதையும் அவரது கதைகளில் நாம் அடையாளம் காணலாம்.

சி. சிவசேகரம்






## பாரதியின் மெய்ஞ்ஞானம்

ந. இரவீந்திரன்

முதற்பதிப்பு: டிசம்பர் 1986.
இரண்டாம் பதிப்பு: மார்ச் 1993. ரூபா: 25.00

ஆன்மீகவாதிகள் அனைவரும் மனித குல விடுதலைப் போராட்டங்களின் விரோதிகள், பிற்போக்குவாதிகள் என்று ஒரு சாராரும், ஆன்மிகம் வேரூன்றி விட்ட இந்த மண்ணில் ஆன்மீகம் கலந்த ஒரு வகை மார்க்சியத்தின் மூலமே ஒரு சமுதாய மாற்றம் சாத்தியமாகும் என்று இன்னொரு சாராரும் கருதுகின்ற நிலையில் ஆன்மீகத்தின் முற்போக்கான பாத்திரத்தை எப்படி தேச நலனுக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படைச் சமுதாய மாற்றத்திற்கும் துணையாகக் கொள்ளலாம் என்ற ஆய்வினை விரிவாக்க இந்நூல் துணை செய்கின்றது.



## இன்றைய உலகில் இலக்கியம்

முருகையன்

பதிப்பு: பெப்ரவரி 1988. ரூபா: 14.00

இன்றைய உலகில் இலக்கியம் – சமுதாயப் பொறுப்புள்ள எழுத்தாளரின் படைப்பு.

மக்கள் – மொழி – பண்பாடு – கலை – இலக்கியம் – விஞ்ஞானம் இலக்கிய நயப்பு – இலக்கிய விமர்சனம் – இலக்கியப் பரவல் – இலக்கிய நூல






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு ஆகியவற்றிற்கிடையேயான உறவுகள் குறித்து ஓர் இலக்கிய வாசகனுக்கு எழும் ஐயங்களை இதன் ஆசிரியர் முருகையனும் எண்ணிப் பார்த்து, அவற்றுக்குத் தெளிவு காண முனைந்ததன் விளைவே இன்றைய உலகில் இலக்கியம் என்ற இந்த நூல் எனத் தோன்றுகிறது. தமது கருத்துக் களைத் சிக்கலின்றி வெளிப்படுத்தி யுள்ளமை அவரது கைவந்த எழுத்துக் கலைக்கு நல்ல சான்றாகும்.

இந்த நூல் இலக்கிய ஆர்வலர்கள் அனைவராலும் படிக்கப்பட வேண்டிய நூலாகும். கருத்து மாறுபாடுகளுக்கு இடமிருப்பினும் கூட அவை மேலும் சிந்தனையைச் செழுமைப்படுத்துவ தாகவே அமையுமென்பதால், இந்த நூல் அனைவரது கவனத்துக்கும் உரியதாகும்.

– இராம. சுந்தரம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

➤ ➤ ➤ ➤ ● ◄ ◄ ◄ ◄



## மரபும் மார்க்ஸியவாதிகளும்

*சி. சிவசேகரம்*

**பதிப்பு : ஒகஸ்ற் 1989. ரூபா:8.00**

நமது சமுதாய சீரழிவின் விளைவாக, போலித்தனமான புத்திஜீவி மனோபாவம் நமது மத்தியதர வர்க்கத்தினர் நடுவே மலிந்துள்ளதால் மாக்ஸியம் பற்றி ஆறாவது குருடனுடைய வர்ணனைகளை நாம் அடிக்கடி கேட்க நேருகிறது. சிலவேளைகளில் அதற்குப் பதிலளிக்க வேண்டிய தேவை நமக்கு ஏற்படுகிறது. மாக்ஸியம் பற்றிய எல்லாப் பொய்ப் பிரச்சாரங்கட்கும் பதில் எழுதிக் கொண்டிருக்க நமக்கு அவகாசமில்லை. ஆயினும் சில முக்கியமான விஷயங் களைப் பற்றி மாக்ஸியத்தின் நிலைப் பாட்டை விளக்குவது அவசியமாகிறது.

இக்கட்டுரைகள் மாக்ஸியத்தின் மீது சேறு வீசும் முயற்சிகளை முறியடிக்க ஒரு சிறுபங்கையெனும் அளிக்கும்.

➤ ➤ ➤ ➤ ● ◄ ◄ ◄ ◄

## சமகால சமூகப் பார்வைகள்

பத்து ஆய்வுக் கட்டுரைகள்

பதிப்பு: நவம்பர் 1991. ரூபா: 22.00




* முன்னுரை
  – பேராசிரியர் சி. தில்லைநாதன்.
* விஞ்ஞானக் கல்வியின் சமூகப் பயன்
  – இ. முருகையன்.
* சமூக அபிவிருத்தியில் கல்வியும் மனித வலுத் திட்டமிடலும்
  –மா. சின்னத்தம்பி.
* மலையகக் கல்வி வரலாறும் நடைமுறைப் பிரச்சினைகளும்
  – எஸ். இராஜேந்திரன்.
* தமிழர் சமூக வாழ்வில் பழமை வாதம்
  – சி . கா. செந்திவேல்.
* பெண் விடுதலை வேண்டும்
  – க. தணிகாசலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தேசிய இலக்கியமும் கட்சி இலக்கியமும்
  – ந. இரவீந்திரன்.

* மலையகத் தொழிலாளர்களும் வேதனமும்
  – ஜெ. சற்குருநாதன்.

* மலையக மக்களின் அரசியல் எதிர்காலம்
  – இ. தம்பையா.

* கம்யூனிசத்தின் தற்காலப் பின்னடைவு?
  – ஏ. ஜெ. கனகரட்ண.

* கத்திகள் கையிலேந்தி
  – சி. சிவசேகரம்.

தோழர் மணியம் – கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாக இந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுதி அவரது மறைவின் இரண்டாவது நினைவு நாளில் (27–11–91) வெளியிடப்பட்டது.




## விமரிசன முறையியல்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

பதிப்பு – ஒக்ரோபர் 1992. ரூபா: 12.00

விமர்சன முறையியல் என்ற பெயரில் இரண்டாம் பதிப்பாக வெளிவரும் இந்நூல் முதற்பதிப்பில் விமர்சன மெய்யியல் என்ற பெயரில் வெளியிடப்பட்டது. கலை இலக்கிய விமர்சனத்தின் பல்வேறு தளங்கள் பற்றியும், பன்முகப் பார்வையிலான விமர்சனம் பற்றியும் இந்நூல் சுருக்கமாக எடுத்துரைக்க முயல்கிறது.



## பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும்

சுபைர் இளங்கீரன்

பதிப்பு – டிசம்பர் 1992. ரூபா: 17.00




காலத்திற்குக் காலம் இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழாராய்ச்சி செய்யும் மாணவர்கள் எனது கணவரைப் பற்றிய தகவல்களைக் கேட்டு எழுதுவார்கள். அப்பொழுதெல்லாம் அவரைப் பற்றிய நூல்கள் இல்லாத குறையை உணர்வேன். இந்த நூலை இளங்கீரன் அவர்கள் எழுதியுள்ளது எனக்கு அளவற்ற நிம்மதியையும் திருப்தியையும் தருகிறது. கைலாசுடைய நீண்ட கால நெருங்கிய நண்பராக கீரன் இருந்தமையால் அவருக்குப் பல விஷயங்கள், உண்மைகள் தெரிந்திருந்தன. அவற்றை அவரால்தான் எழுதமுடியும்.

– சர்வம் கைலாசபதி

கைலாசுடன் ஒன்றாகப் பணியாற்றியவர்கள் நெருங்கிப் பழகியவர்களுக்கு மாத்திரமே தெரிந்திருக்கக் கூடிய பல தகவல்கள், குறிப்பாக தினகரன் பத்திரிகையாசிரியர் காலத்துச் செயற்பாடுகள், நாடகம், ஒலிபரப்பு ஆகிய துறைகளில் காட்டிய ஈடுபாடு பலருக்குத் தெரியாதவை. இவை பற்றி இந்நூல் முக்கியமான தகவல்களையும் கருத்துகளையும் தருவது இதன் சிறப்பியல்பாகும்.


பேராசிரியர் கைலாசபதியுடைய கலை, இலக்கிய, பல்கலைக்கழக, சமூக, அரசியல் வாழ்க்கையின் அனைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளையும் தொட்டுச் செல்லும் நம்பகமான நூல் என்ற பெறுமதி என்றும் இந்நூலுக்கு இருக்கும்.

— சித்திரலேகா மௌனகுரு




பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள்

## பன்முக ஆய்வில் கைலாசபதி

### பதின்மூன்று ஆய்வுக்கட்டுரைகள்


பதிப்பு – டிசம்பர் 1992. ரூபா – 30.00

தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்தி வந்த பேராசிரியர் க. கைலாசபதி நினைவு ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் தாயகம் இதழ்களில் வெளியிடப்பட்டு வந்தன. இவற்றின் தொகுப்பாக, 'பன்முக ஆய்வில் கைலாசபதி' வருவது குறிப்பிடத்தக்க இலக்கியப் பங்களிப்பாகும்.

கைலாசபதி என்னும் இலக்கிய மாமேதையைப் பற்றி உளங்கவந்து, வாய் மணக்கக் கூறப்பெற்று வரும் பாராட்டு உரைகள், பலவற்றை நான் அறிந்து இருந்தாலும், இந்நூலில் சற்று வித்தியாசமான இலக்கிய அனுபவத்தை அடைகிறேன். பேராசிரியருடைய வாழ்க்கை வரலாறு முழுமை பெற எழுதப்படும் பொழுது, அதற்குத் தேவைப்படும் பல உண்மைகள் முதன் முதலில் இந்நூலில் வெளிப்பட்டுள்ளதை புதிய அனுபவமாகக் குறிப்பிடுகின்றேன்.

— பெ. சு. மணி

## கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்




### சி.கா. செந்திவேல்

பதிப்பு: நவம்பர் 1992. ரூபா 12.00

இந்நூல், கைலாசின் கலை இலக்கிய, சமூக நோக்கினையும் அவரது அரசியல் நிலைப்பாட்டையும் பலதுறை சார்ந்த அவரது பங்களிப்புகளையும் தெளிவாக அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைலாசின் வாழ்வையும் பணிகளையும் எழுத்துகளையும் நன்கு அறிந்தவரான இந்நூலாசிரியர், கைலாஸ் எழுதியுள்ள நூல்கள், கட்டுரைகள், கையெழுத்துப் பிரதிகள், கடிதங்கள், உரையாடல்களின் போது பெற்றுக் கொண்ட தகவல்கள், ஆய்வு நூல்களுக்கும் ஆக்க இலக்கியங்களுக்கும் அவர் எழுதியுள்ள நீண்ட முன்னுரைகள், சிறப்பு மலர்கள் நினைவேடு முதலியவற்றையும், கைலாசின் பணிகள் பற்றி அவரது ஆதரவாளர்கள், நடுநிலையினர், எதிரணியினர் எனப் பல திறத்தாரும் தெரிவித்துள்ள கருத்துக்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார்.

பேராசிரியர் சி. தில்லைநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மலையக வாய் மொழி இலக்கியம்

சாரல் நாடன்

பதிப்பு : ஏப்ரல் 1993. ரூபா. 10.00

எழுதப் படிக்கத் தெரியாத பாட்டாளி மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் 'நாட்டார் பாடல்' என அழைக்கப் பெறும் வாய் மொழிப் பாடல்கள் எல்லா நாடுகளிலும் எல்லா இனமக்கள் இடையேயும் இருப்பது போலவே இலங்கை மலையக மக்களிடையேயும் வாய்மொழிப்பாடல்கள் ஏட்டில் எழுதா இலக்கியமாக இருந்து வருகின்றன.

தென்னிந்தியத் தமிழ் மக்களின் வம்சாவழியினர் என்பதால் தென்னிந்திய – தமிழக நாட்டார் பாடல்களையொத்த பல பாடல்கள் இவர்தம் வாய்மொழிப் பாடல்களில் இருக்கின்ற தம் வாழ்க்கைச் சூழல்கள், இயல்புகளுக்கேற்ப இந்த வாய்மொழிப் பாடல்களும் மாற்றமடைந்து இம்மலையக மக்களுக்கேயுரிய தனித்துவமான பாடல்களாக இருப்பதை அவதானிக்கலாம்.




## தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்

சுபைர் இளங்கீரன்

பதிப்பு: மே 1993. ரூபா:18.00

1950க்கு முன் இந்தியாவைத் தாய் நாடாகவும் இலங்கையைச் சேய் நாடாகவும் ஈழத்தமிழர் கருதிவந்தனர். இந்த உணர்வில் இந்திய நூல்களையும் சஞ்சிகைகளையும் விரும்பிப் படித்தனர். ஆனால் இவை ஈழத்தமிழரின் வாழ்க்கையை அவர்களின் உணர்வுகளை, அபிலாஷைகளை, சிந்தனைகளைச் சித்தரிப்பவையாக இருக்கவில்லை.

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் "தேசிய இலக்கியம்" பிரசித்தமான சொல். இதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு.

இத்தொகுப்பில் 'தேசிய இலக்கியம்' பற்றி பேராசிரியர் க. கைலாசபதி, ஏ.ஜெ. கனகரத்தினா, அ.ந. கந்தசாமி ஆகியோர் எழுதிய கட்டுரைகளும் உள்ளன.

இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் அனைத்தும் முப்பது வருடங்களுக்கு முன் ஈழத்துத் தமிழ் இலக்கிய அரங்கில் சர்ச்சைக்குள்ளான விஷயங்களையும் படைப்பிலக்கியங்களைப் பற்றி புதிய சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் எழுத்துக்காட்டுவன.



## தமிழும் அயலும்

சி. சிவசேகரம்

பதிப்பு: ஜூன் 1993. ரூபா.22.00

சமூக வளர்ச்சி எப்படி பல்வேறு காலகட்டங்களிலும் பரிணாமம் பெற்று மாற்றமடைந்து வளர்ந்து வந்திருக்கிறதோ அதே போலவே மொழியும் நீண்ட வரலாற்றுக் காலகட்டங்களில் சமூக மாற்றம் – சமூகத் தேவைக்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது.

மொழி அதன் தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்பது மொழியின் வளர்ச்சிக்கும் அந்த மொழியைப் பேசுகின்ற சமூகத்தின் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

இன்று உலகின் பல்வேறு மொழி களைப் பேசும் மக்களின் தொடர்புகளும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அதிகரித்து வருகின்றது. தமிழர்கள் பல நாடுகளுக்கும் சென்று குடியேறி வாழ்தலுடன் தொடர்பான சமூக மாற்றங்களைக் கிரகித்து வெளிப்படுத்த வேண்டிய தேவையும் தமிழ் மொழிக் குண்டு.




## கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்

### நீலாவணன் வாழ்வும் இலக்கியப்பணியும்

கலாநிதி சி. மௌனகுரு

பதிப்பு: மார்ச் 1994 ரூபா:12.00

கவிஞர் நீலாவணனின் வரலாறு அவரது உற்றாரினதும் உறவினரதும் ஊராரினதும் கவனத்துக்கு மட்டும் உரியதன்று. ஒரு கவிஞரின் அனுபவமும் உலக நோக்கும் வளர்ந்து செல்வது மட்டுமன்றி எமது நாட்டின் சமூக அரசியல், இலக்கியப் போக்குகளையும் விண்டுகாண விழை வோருக்கு அவ்வரலாறு பயன்படத் தக்கது.


நீலாவணனைப் புரிந்து கொள்வதோடு நவீன தமிழிலக்கியப் போக்குகளை, சிறப்பாக ஈழத் தமிழிலக்கியப் போக்கு களை விளங்கிக் கொள்ளவும் இந்நூல் உதவுவதாகும். வார்த்தைகள் வாயிலாக வெளிப்படையாகக் கூறப்படுவன வற்றுக்கு அப்பாலும் பலவற்றை உய்த்துணரக் கூடுமென்றும் தோன்று கிறது. நீலாவணனை அல்லது நவீன தமிழ்க் கவிதையைப் பற்றிய விரிவான ஆய்வுகளுக்கு இந்நூல் உதவியும் உற்சாகமும் அளிக்கவில்லது.

பேராசிரியர் சி. தில்லைநாதன்

## 20 –ஆம் நூற்றாண்டுக்கான ஓவியக் கொள்கைகள்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

பதிப்பு: ஜூன் 1994. ரூபா.12.00




நுண்கலைகளில் ஒன்றான ஓவியம் பற்றிய நூல்கள் தமிழில் மிக அருந்தலாகவே உள்ளன. அதிலும் குறிப்பாகத் தத்து வார்த்த விளக்கத்தைத் தருவன எவையு மில்லை என்று கூறுதல் வேண்டும். 20–ஆம் நூற்றாண்டின் பிரதான ஓவியக் கூடங்களின் தத்துவார்த்த நிலைப்பாடுகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. சுவைஞர்கள் இந் நூலை ஓர் அறிமுகமாகவே கருதுதல் வேண்டும். மாணவர்களுக்கு பல்வேறு ஓவியக் கூடங்களின் கொள்கைகளை அறிமுகம் செய்ய வேண்டிய தேவையேற்பட்ட பொழுது தமிழில் ஓர் அறிமுக நூலொன்றின் அவசியம் உணரப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்

தமிழ்மணி. அகளங்கன்

பதிப்பு: ஜூலை 1994 ரூபா: 17.00

பாரதியின் சுதந்திரப் பாடல்கள் பாரதியின் காலத்துக்கு மட்டுமன்றி உலகில் அடக்குமுறையும் அடிமைத் தனமும் இருக்கும்வரை உயிர்த் துடிப்புடன் வாழவல்லவை என்பதையும் உலகில் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைப் படுத்தப்பட்ட எந்த ஒரு நாடோ இனமோ சமூகமோ வர்க்கமோ விடுதலைகோரி போராடத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன என்பதையும் நூலாசிரியா அழுத்திக் கூறியுள்ளார்.

பாரதியைப் பற்றித் தரமான ஆய்வு நூல்கள் பல வெளிவந்துள்ளனவேனும் சாதாரண மக்களும் பாடசாலை, கல்லூரி மாணவர்களும் இலகுவாற புரிந்து கொள்ளக் கூடிய நூல்கள் எண்ணிக் கையிற் குறைவே. இந்நூல் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகவும் இலகு நடையிலும் அமைந்துள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

கலாநிதி க. அருணாசலம்

## அழகியல்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

பதிப்பு: ஜூலை 1995. ரூபா:.....

'பணத்தையும் காலத்தையும் விரயமாக்கி கலை – அழகியல் முயற்சிகளில் நாம் ஈடுபாடு கொள்வதேன்? அழகியலனுபவம் எதற்காக விரும்பப்படுகிறது? இதுபோன்ற வினாக்களிற்கான விடையை அழகியற் பெறுமானங்கள் பற்றிய ஆய்விலிருந்தே ஒருவர் பெறுதல் வேண்டும்.

கலையும், அழகியல் நுகர்வைத்தரும் பொருட்களும் நிகழ்ச்சிகளும் அவற்றின் உள்ளார்ந்த விழுமியங்களுக்காகவே விரும்பப்படுகின்றனவென்றும், அவை தரும் அனுபவம் பெறுமதியானதென்பதினாலேயே போற்றப்படுகின்றனவென்றும் பெரும்பாலான கலைக் கொள்கையாளர் நம்புகின்றனர்'

இவ்வாறாக வெல்லாம் எழுதிச் செல்லும் ஆசிரியர், 'கலை – இலக்கியங்களின் மையப் பிரச்சினையான அழகியல் பற்றி முழுமையான பார்வையொன்றைத் தர இந்நூல் முயலகிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞனை மையமாகக் கொண்ட அழகியற் பிரச்சினைகள், நுகர்வோனை மையமாகக் கொண்ட அழகியற் பிரச்சினைகள், கலையும் மொழியும் எப்பொழுது எது எப்படி, கலையின் உருவாக்கம், இருப்புப் பற்றிய வினக்கங்கள், விளக்கமும் விமர்சனமும், அழகியற் பெறுமானங்கள் என்ற தலைப்புகளிலே இவ்வாய்வு நூல் ஆக்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20ம் நூற்றாண்டு ஓவியம் – சில குறிப்புகள்

கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்

பதிப்பு: ஜூலை 1995 ரூபா.......

தமிழ் ஓவியக்கலை ஆர்வலர்களுக்கு நவீன ஓவியம் பற்றிய அறிவை விசாலித்துக் கொள்ளவும் – விவாதித்துக் கொள்ளவும் இந்நூல் உதவும்.

20–ஆம் நூற்றாண்டு மாற்றங்கள் நிறைந்த கால கட்டம். வாழ்வின் நியமங்க ளெல்லாம் நிச்சயமற்றதாகி மாற்றம் ஒன்றே நிச்சயமான நிகழ்வாகி விட்ட காலகட்டம். இதனால் கலை இலக்கியத் துறைகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

ஓவியன் வெறுமனே காட்சிப் பதிவுடன் மட்டும் நின்று விடாது அவற்றை தன் சார்பு நிலைகளில் நின்று நோக்கினான். தன் கருத்து நிலைகளூடாக அவற்றில் விகாரங்களை ஏற்படுத்தினான். தன் படைப்புகளில் தன் பார்வையை ஏற்றினான். தன் விருப்பத்தின்படி நிறங்களை மாற்றினான்.

ஓவிய வளர்ச்சியில் ஏற்பட்ட இந்தப் பாரியமாற்றம் பார்வையாளனின் தன்மை யிலும் ஒரு மாற்றத்தைக் கோரி நிற்கின்றது. இன்றைய ஓவியம் ஓர் ஈடுபாடுள்ள பார்வையாளனை வேண்டி நிற்கிறது. அறிவுபூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுகும் பார்வையாளனை அது கோரி நிற்கிறது. இந்தத் தேவையினை மனங் கொண்டே இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.



## பாரதி பன்முகப் பார்வை

முதற்பதிப்பு:– 1984.
இரண்டாம் பதிப்பு:– 1995.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழுக்கு புத்துயிர் அளித்து நின்றவர் மகாகவி சுப்ரமணிய பாரதி. தமிழ் இலக்கிய உலகிற்கு வளம் சேர்க்க முற்படும் எவருக்கும் பாரதி ஓர் கலங்கரை விளக்கமாகவே திகழ்ந்தார். அவரது ஆக்கங்கள் அனைத்தினதும் அடிநாதம் தேச விடுதலையும் சமூக விடுதலையுமேயாகும். இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது கருத்துக்கள், எழுத்துக்கள் வற்றாத ஊற்றாக ஆய்வாளர்களால் அள்ளி அள்ளி ஆராயப்பட்டு வருகின்றன. அவ்வாறான ஆய்வுப் பயணத்தில் உருவாகிய நூலே பாரதி பன்முகப் பார்வையாகும். 1982ல் பாரதி நூற்றாண்டு நினைவாக தேசிய கலை இலக்கியப் பேரவை யாழ்ப்பாணத் தில் நடத்திய தொடர் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் இந்நூலிலே தொகுக்கப்பட்டுள்ளன.

பாரதி ஆய்வாளர்களில் முதன்மை யானவராகக் கருதப்படும் மறைந்த பேராசிரியர் க. கைலாசபதியின் வழிகாட்டலில் அவரது தலைமையில் இடம் பெற்ற பாரதி ஆய்வரங்கில் பத்துக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. ஈழத்து ஆய்வாளர்கள் பாரதியை பன்முகப்பட்ட நோக்கிலே ஆய்வு செய்துள்ளனர். இந்நூலே தேசிய கலை இலக்கியப் பேரவையின் முதலாவது வெளியீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சனங்கள்

சிவசேகரம்

பதிப்பு: ஜூலை 1995. ரூபா........

இதுவரை படைப்பிலக்கிய வெளி யீடுகள் அருந்தலாகவோ பகீரதப் பிரயத்தன முயற்சிகளாகவோ அமைந்து விட்டமையால் அநேகமாக அவற்றுக்கு ஆதரவாகவே தமிழாய்வாளர்கள் செயற் பட்டனர். மாற்று அணியினராயின் எதிராக எழுதினர் அல்லது எழுதாமலே விட்டனர். தமிழில் ஆய்வுப்பணி விருத்தி யடைந்தளவுக்கு விமர்சனப் பணியின் வேகம் போதுமானதாக அமையவில்லை.

விமர்சனப்பணியில் முன்னணியில் நிற்கும் வெகுசிலரில் சிவசேகரமும் ஒருவர். அவரது விமர்சனங்களில் நாம் பல படைப்பாளரின் படைப்புகளைப் படிக்கலாம். விவாதிக்கலாம். இதுவே சிவசேகரம் அவர்களின் முதலாவது விமர்சன நூலாகும்.

மரணத்துள் வாழ்வோம், அது அவர்கள், மரண நனவுகள், எலும்புக் கூடுகளின் ஊர்வலம், சிவரமணியின் கவிதைகள், மறையாத மறு பாதி, முகம் கொள், காகம் கலைத்த கனவு, உலா, அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும், யாழ்ப் பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல், தீபங்கள் எரிகின்றன, முறிந்த பனை ஆகிய நூல்கள் விவாதத்துக்குள்ளாகின்றன.

தர்மு சிவராமு, டானியல்; சுந்தரராமசாமி, காசி ஆனந்தன் ஆகியோரது படைப்புகள் பற்றிப் பேசப்படுகின்றன. இருத்தலியல் வாதம் பற்றிய சண்டை நடக்கிறது. சேரன், எஸ். வி. ராஜதுரை, செல்வி. திருச்சந்திரன் ஆகியோரின் பதிற்குறிப்புகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன.





## சின்னச்சின்னக் கதைகள்

பாகம் - 1

கதை சொல்பவர்;
மாவை நித்தியானந்தன்

ஓவியர் : மருது

பதிப்பு: மார்ச் 1994 ரூ பா 15.00

இந்நூலில் உள்ள கதைகள் 2000 வருடங்களுக்கு மேலாக வாழும் கதைகள். முழு உலகும் போற்றும் கதைகள். இக்கதைகளைப் புதிய வடிவத்தில் தமிழ்க் குழந்தைகளுக்குக் கொண்டு வருகிறது இந்நூல்.


இலகுவான தமிழ்; இனிய நடை; மட்டான சொற்கோவை (Vocabulary) இவை இந்நூலின் சிறப்பு அம்சங்கள் கதைகளுக்கு மேலும் கவர்ச்சியைத் தருகின்றன.

சுவையான இக்கதைகளில் பல விதமான மனிதர்களையும், மிருகங் களையும், பறவைகளையும், சந்திக்கலாம். மிருகங்களும் பறவைகளும்,மனிதர் களைப் போல் சிந்திக்கும்; பேசும், கதையின் முடிவில் ஒரு முத்தான படிப்பினை ஒளிரும்.

இக்கதைகள் காலத்தால் அழியாதவை. குழந்தைகள் முதல் வளர்ந்தோர் வரை எல்லா வயதினரையும் கவரக் கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாப்பா பாடல்கள்

கல்வயல் வே.குமாரசாமி

பதிப்பு :ஜூன் 1995. ரூபா:14.00

"பருவத்தே பயிர்செய்" என்பது பழமொழி; முந்தையோர் கண்டமுறை; பட்டறிவினாலேயே அவர்கள் படித்துத் தெளிந்த பாடம்.

பாலர்களுக்கென்று தயாரிக்கப்படும் பாடல்கள் அவர்களின் அநுபவப் புலத்துடன் இயைபுகொண்டு, அவர்களின் எண்ணக்கருக்களின் எல்லைகளை மீறாத பொருளடக்கமும், அவர்களுக்கு வசமாகியுள்ள சொற்களஞ்சியத்தை அதிகம் மீறி அப்பாற் செல்லாத மொழி வளமும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பாலர்கள் அந்தப் பாடல்கள் ஆனந்தமாகப் பாடி ஆட வேண்டும். அவ்வித அழகுக் கவர்ச்சியும் கொண்டனவாக அவை அமைதல் வேண்டும்.

–அறிவழகு பதிப்பகம்

குழந்தைகளுக்கான பாக்கள் புனைவது ஒரு சவால் என்றே சொலல் வேண்டும். பாலருடைய அனுபவப் பரப்புக்குள்ளும் அவர்களுடைய சொற்களஞ்சியத்துக்குள்ளும் நின்று கொண்டு பாட எல்லோராலும் முடிவதில்லை. கல்வயலார் இதில் சமர்த்தர் என்பதை அவரது பாடல்கள் நிரூபித்துள்ளன.

– கவிஞர் சொ. ப.





## சங்காரம்
## ஆற்றுகையும் தாக்கமும்

கலாநிதி சி. மௌனகுரு

பதிப்பு: ஜூலை 1993. ரூபா: 21.00.




கலாநிதி சி. மௌனகுருவின் சங்காரம் ஈழத் தமிழருடைய கூத்துக்கலை வரலாற்றிலே ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை ஏற்படுத்தி புதியதொரு வளர்ச்சி நிலையைக் குறித்து நிற்பதொன்றாகும்.

ஒரு நாடகத்தை அவைக்கு வழங்கும் போது, அதனைப் பார்த்த சுவைஞர்கள், திறனாய்வாளர் என்ன கருதுகின்றனர் என்பதை அறிவதன் மூலம் அந்நாடகத்தின் அவைக்காற்றினையும் தாக்கத்தினையும் யாவரும் உணர முடியும். இதற்கு வழி செய்வது போல இந்நூலிலே நாடகத்தினையும் அது தொடர்பாக வெளிவந்த எழுத்துக்களையும் ஒருங்கு சேர அச்சிடப்பட்டுள்ளது.

இந்த வகையில் குறை நிறைகளைச் சுட்டும் எழுத்துக்களுடன் முதன்முதலாக வெளிவரும் ஈழத்து நாடக நூல் கலாநிதி. சி. மௌனகுருவினுடைய இந்நூலே ஆகும். இந்நூல் ஈழத்துத் தமிழ்த் திறனாய்வு மிக உயர்ந்த நிலையிலே இருக்கின்றது என்பதைத் தமிழருக்குப் பறைசாற்ற வல்லது.

– பேராசிரியர் அ. சண்முகதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மேற்பூச்சு

முருகையன்

பதிப்பு – ஜூலை 1995. ரூபா:.......

"செங்கோலில்" இடம்பெறுவது எல்லோருக்கும் தெரிந்த "சிலம்பின்" கதைதான். வழமையாகக் கண்ணகியின் பக்கம் நின்றே இந்த வழக்கை நாம் நோக்குவதுண்டு என் நாடகத்தில் செழியனின் பார்வைக் கோணத்திலிருந்து சங்கதிகளைக் காட்ட முயன்றுள்ளேன்.

அடுத்து இடம் பெறுவது "கலைக்கடல்". ஒருவகையான நடைச் சித்திரம். இலக்கிய உலகப் பிரமுகர் ஒருவரின் ஈடுபாடுகளையும், நாட்டார்களையும், சங்கடங்களையும் வேடிக்கையான தொனியில் படஞ்செய்வது இது.

அடுத்து வருவது, 'கொண்டுவா தீயை கொழுத்து விறகை எல்லாம்', முதலிலே "போகாமை" என்னுமொரு வானொலி நாடகமாகத்தான் இது பிறப்பெடுத்தது. மக்களிடை வழங்கும் ஒரு நாடோடிக் கதையே இதன் வித்து. 'உடையார் பொல்லு' என்று தலைப்பிடக் கூடியது.

நாலாவதாய் இடம் பெறுவது "சும சும மகாதேவா" இதுவும் தமிழ் மக்களிடையே வழங்கி வரும் ஒரு நாடோடிக் கதையின் மாற்று வடிவமே. வழிவழியாக வந்த ஒரு கருத்துப் படிவத்துக்குப் புதிய பரிமாணங்கள் சிலவற்றை வழங்கியிருக்கிறேன்.

ஐந்தாவதாக இடம்பெறுவது 'அப்பரும் சுப்பரும்' இது முழுநேர மேடை நாடகம். இதில் வரும் மேடைச் செயற்பாடுகள் முக்கியமானவை. இலங்கையில் நடந்தேறியுள்ள அரங்குக்கலை நோக்கின் வளர்ச்சியை ஓரளவு உணர்ந்து கொள்ள வேண்டும் என்றால் இதை மேடையேற்றிப் பார்க்க வேண்டும்.

– முருகையன்

## உண்மை

முருகையன்

பதிப்பு – ஜூலை 1995 ரூபா:.........

முருகையன் என்ன சொல்கிறார்? "ஐம்பதுகள் தொடக்கம் அண்மைக் காலம் வரை நான் எழுதிய நாடகங்களுள் ஐந்து இந்தப் புத்தகத்தில் இடம் பெறுகின்றன. ஏற்கனவே கோபுரவாசல், வந்து சேர்ந்தன, தரிசனம், கடூழியம், வெறியாட்டு என்பவற்றோடு மேற்பூச்சு என்னும் தொகை நூலில் இடம்பெற்ற ஐந்து நாடகங்களையும் சேர்த்து எல்லாமாகப் பத்து நாடகங்கள் நூல்வடிவம் பெற்றுள்ளன. இப்போதைய புத்தகத்துடன் நான் இயற்றிய பதினைந்து நாடகங்கள் வாசகர்களுக்கு எட்டும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன.

முன்னொரு காலத்திலே நாடகங் களை, படிப்பதற்கு உரியன என்றும் நடிப்பதற்கு உரியன என்றும் பிரித்துப் பேசும் வழக்கம் சில வட்டாரங்களில் நிலவியது. இவற்றுள், படிப்பதற்கென எழுதப்படுவன இலக்கியத்திறம் வாய்ந்தன என்றும் ஏனையவை சனரஞ்சகமானவை. ஆதலால் அவைதரத்திலே குறைவுபட்டவை என்றும் பலரும் பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுவதுமுண்டு. அவ்விதமான இலகு சமன்பாடுகள் பொருத்தமற்றவை என்பது இன்றைய கருத்து வளர்ச்சி நிலையில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் உண்மை எனலாம்.

இந்தப் புத்தகத்தில் வரும் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு விதமானவை; ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரலாறு. இவற்றைப் பரந்துப்பட்ட வாசகர் உலகும் தமிழ் நாடக அக்கறையாளர்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று தேசிய கலை இலக்கியப் பேரவை விரும்பியது.

## நாடகப் பிரதிகள்

1. பொய்க் கால.
2. குற்றம் குற்றமே.
3. தந்தையின் கூற்றுவன்.
4. இரு துயரங்கள்.
5. கலிலியோ.

## மண் சுமந்த மேனியர்

**குழந்தை ம. சண்முகலிங்கம்**

**பதிப்பு: ஜீலை 1995.**

யாழ். பல்கலைக்கழக மாணவரால் நடிக்கப்பெற்ற இந்நாடகம் தமிழ்ப் பிரதேசங்களில் நடந்து கொண்டிருக்கும் அரசியற் போராட்டத்துக்குப் புதிய ஒரு பரிமாணத்தை வழங்கியுள்ளது.



கலையின் நுணுக்கத்தினால் மக்களிடத்தே அது ஏற்படுத்தும் உணர்திறனால், சில முக்கியமான மனப் பதிவுகளை ஏற்படுத்தலாம் என்பதையும் சமூகப் பிரக்ஞையை ஏற்படுத்தும் தொடர்பு முறைமை கலை வழியாற் செம்மையாகச் செய்யப்படலாம் என்பதையும் 'மண்சுமந்த மேனியர்' என்ற இந்த நாடகம் எடுத்துக் காட்டியுள்ளது.

– கார்த்திகேசு சிவத்தம்பி
(மல்லிகை)

'மண்சுமந்த மேனியர்' பெரும்பாலானோரின் கவனத்தைக் கவர்ந்தமைக்குக் காரணம் யாது? முதலாவது காரணம் இந்நாடகம் தமிழ் பேசும் மக்களது சமகால சமூக அரசியல் பிரச்சினைகளின் சில அம்சங்களை வேறெந்தக் கலைப் படைப்புகளும் எழுத்தாளத் துணியாத சந்தர்ப்பத்தில் கையாண்டமையும் அவை பற்றிய சில கருத்துக்களைக் கூறியமையும் ஆகும். இரண்டாவது அதனுடைய வடிவமைப்பு அல்லது அது அளிக்கப்பட்ட முறைமை ஆகும்.

– மௌ. சித்திரலேகா
(புதுசு)

'மண்சுமந்த மேனியர்' என்ற இந் நாடகத்தின் பெயரும் ஆரம்பத்தில் வரும் நாட்டுப் பாடல் அடிகளைக் கொண்ட பஜனை ஊர்வலமும் பிட்டுக்கு மண் சுமந்த புராணக் கதையை நினைவு படுத்தினாலும் கதையின் பின்னணியில் தமது உழைப்புக்கும் வாழ்வுக்கும் மண்ணையே நம்பி மண்ணிலே கிடந்து, மண்ணிலே தோய்ந்து வாழும் உழைப்பாளிகளின் குரல்களே உறுதியாகக் கேட்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடி மிக்க இன்றைய நாளில் இந்திய மாநிலச் செய்தி கேட்பவர்கள் அதில் கொண்டிருக்கும் அளவற்ற நம்பிக்கையையும் மதிப்பையும் வெளிப் படுத்தி இறுதியில் அதிலும் நம்பிக்கை இழந்து இவங்களும் சேர்ந்து விளையாடு றாங்கள் என்று அலுத்துக் கொண்டதும், மாநிலச் செய்தி மூலம் அந்த ஆட்சி வந்திடுமென்டு வாயைப் பிளந்து வடக்கை பாக்கிற கூட்டம் என்று கிழவன் விமர்சிப்பதும் சிந்தனையைத் தூண்டி விடுகிறது.

– கலையன்பன்
(தாயகம்)

## அன்னை இட்ட தீ

குழந்தை ம. சண்முகலிங்கம்

பதிப்பு: ஜீலை 1995.

பொதுவாக இந்நாடகமானது போரின் பல்வேறு வகையான நெருக்கீடு நினைவுகளையும், அதனால் ஏற்படும் தாக்கங்களையும் பிரதிபலிக்கும் அதை வேளை இவற்றினால் குடும்ப, தனி மனித மட்டத்தில் ஏற்படக்கூடிய உளவியல் ரீதியான தாக்கங்களை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளது.

உளமறி நாடகம் என்ற வகையில், பொதுப் பிரச்சனைகள் மேடையில் வெளிப்படுத்தப்படும் பொழுது பார்வை யாளர்களின் சொந்த ஒடுக்கப்பட்ட உணர்வுகளிலும் விழிப்பினை ஏற்படுத்தி நாடகத்தின் பாத்திரங்களினூடாக செயற் படுத்தி, உளவியல் பிணைப்புகளிலிருந்து விடுவிப்பதற்கு உதவும்.

– வைத்திய கலாநிதி டி.ஜே.சோமசுந்தரம்

இந்த நாடகப் பிரதியை வாசித்துக் கொண்டு செல்கையில் நாடக ஆசிரியர் இதுவரை காலமும் எமது மேடை நாடகங்களில் (போராட்டகால மேடை நாடகங்களில்) தொடப்படாத ஒரு பரிமாணத்தினைத் தொட்டிருப்பது தெரிகின்றது.

– கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்

ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய பண்பு – அவதானம், "சென்ஸ் ஒவ் ஒப்சவேசன்" யாழ்ப்பாணச் சமூகத்தை –அதன் பலவீனங்களை, முரண்பாடு களை இவ்வளவு துல்லியமாக வேறு யாராவது சுட்டிக் காட்டியிருப்பார்களா என்பது சந்தேகமே. தமது பாத்திரங் களூடு "சண்" நொட்டையாகவும், கிண்ட லாகவும் சொல்லும் "கொமன்ற்" ரசமானவை.

– சோ. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெறியாட்டு

( பாட்டுக் கூத்து )

முருகையன்

பதிப்பு : ஜூலை 1986. ரூபா : 10.00

1981–ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நூலகம் பேரினவெறிக் காடையர்களால் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டது.

கவிஞர் முருகையனின் கைவண்ணத்தில் "வேலியே பயிரை மேய்வதாக"க் காட்சிப்படுத்தப்பட்டு பாட்டுக் கூத்தாக யாழ்ப்பாணம் "வெளிவாரிப் பட்டப் படிப்புகள் நிறுவனத்" தினால் தயாரிக்கப் பட்டு பல தடவைகள் மேடை ஏற்றப்பட்டன.

ஈழத்து நாடகத்தை முதலில் வீதிக்கு கொண்டு வந்த முதன்மை நெறியாளர் காலஞ்சென்ற வீ. எம். குகராஜா அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார். காலஞ் சென்ற நடிகர்கள் எஸ். ஜெயக்குமார், கவிஞர். இ. சிவானந்தன் ஆகியோருடன் ஏனைய கலைஞர்களும் பங்கேற்றிருந்தனர். எம். கண்ணன் இசையமைத்திருந்தார்.





## புது வரலாறும் நாமே படைப்போம்

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் எண்பதுகளின் பிற்கூறில் யாழ்ப்பணத்தில் பரவலாக இசைப்பா அரங்கு நடாத்தப்பட்டது.


பிரபல இசை அமைப்பாளர் எம். கண்ணன் அவர்களின் இசை உருவாக்கத்தில் கவிஞர்கள் சிவசேகரம், முருகையன், சோ. பத்மநாதன், தணிகாசலம், தேவராஜா ஆகியோரின் பாடல்கள் இசை வடிவம் பெற்று ஒலிப் பேழையாக வெளியிடப்பட்டது.

எஸ். ஜெயக்குமார், வீ. திவ்வியராஜா, பாலச்சந்திரன் முதலிய பலர் பாடியுள்ளனர்.

தொகுப்பாளராக ந. இரவீந்திரனின் உரை வீச்சும் இடம் பெற்றுள்ளது.

இந்த ஒலிப்பேழை வெளியீட்டுக்கு தன்னை அர்பணித்து உழைத்தவர் எஸ். ஜெயக்குமார் நினைவு என்றும் எம்மோடிருக்கும்.

## குன்றத்து குமுறல்




மலையகத்துக் கவிதைகள் இசை வடிவம் பெற்றன.

கவிஞர்கள் :– சி. சிவசேகரம், இ. தம்பையா, சிவ. இராஜேந்திரன், எஸ். பன்னீர்செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகவுரை : கே. உமாபதி.

பாடியோர் : வீ. திவ்வியராஜா,
முகுந்தன், குழுவினர்.

ஒருங்கிணைப்பு : திவ்வியராஜா.

உதவி : நிர்மல் ராஜ்பீட்டர்.

வெளியீடு : தேசிய கலை
இலக்கியப் பேரவை.




## ஏரிக்கரை ஓரத்திலே

வீ. திவ்வியராஜ்


பாடல்கள் : வீ. திவ்வியராஜ்.
செ. குணரத்தினம்.
அப்துல் குத்தூஸ்.

இசையாக்கம் : ரி. வி. பிச்சையப்பா.
வீ. திவ்வியராஜ்.
கணேசராஜா.
ஸ்டீபன் ராஜ்.

பாடியவர்கள் : வீ. திவ்வியராஜ்.
தி. சிவபாக்கியம்.
புஸ்பா. ராஜசூரியர்.



## விடியலைத் தேடும் கானங்கள்




வீ. திவ்வியராஜன்

பாடல்கள், மெட்டுக்கள், அறிமுகவுரை:
வீ. திவ்வியராஜன்.

பின்னணி இசை :
A. ஸ்டீபன் ராஜா.

தொடர்பு: **1915 Martin Grove Rd,**
**105, Etobicoke (ONT)**
**M9V3T2**
**TORONTO.**
**CANADA.**

## AVA Presents

அருணாவின்
ஒலித் தென்றல் –1




பாடல்கள் ;அருணா செல்லத்துரை.

இசையமைப்பு : எம். எஸ். செல்வராஜா.

பாடகர்கள் : ராணி பொன்னான்டோ.
இரா. நீதிராஜாசர்மா.
ராணி ஜோசப்.
தங்கராஜா தங்கரத்தினம்.
எஸ். குலசேகரம்.
கமலேஸ்வரி கணபதிப் பிள்ளை.
நிலாமதி பிச்சையப்பா.
எஸ். கணேஸ்வரன்.
கை. விஜயரத்தினம்.

தொடர்பு : **AVA (PVT) LTD.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதுப்பாட்டு

பின்னணி இசை :
தேவேந்திரன்.

அறிமுகவுரை :
பிரளயன்.

ஒருங்கிணைப்பு :
இ. மு. வெற்றிவளவன்.

தயாரிப்பு :
சவுத் ஏசியன் புக்ஸ்.

கவிஞர்கள் :
புதுகை மொய்தீன்.
இ. மு. வெற்றிவளவன்.
பிரளயன்.
நவகவி.
தேனி ரமேஷ்.

பாடியவர்கள் :
இ. மு. வெற்றிவளவன்.
எம். கோடீஸ்வரன்.
லஷ்மி சிவகுமார்.
கே. எம். சுந்தர்.
கிருஷ்ணசாமி.
வி. ராமு.
எஸ். ஜார்ஜ்ராஜ்.
குழுவினர்.

## கரிசல் குயில் பாடல்கள் – 2




இசையமைத்து பாடியவர்:
கரிசல் கிருஷ்ணசாமி.

பின்னணி இசை:
தேவேந்திரன்.

தவில்:
சண்முகநாதன்.

அறிமுகவுரை:
பிரளயன்.

பாடல்கள் இயற்றிய கவிஞர்கள்:
பரிணாமன்.
ரமணன்.
நவகவி.
பிரளயன்.
ஷாஜகான்.
கிருஷி.
வெற்றிவளவன்.

வெளியீடு:
தமிழ்நாடு முற்போக்கு
எழுத்தாளர் சங்கம்.
நெல்லை மாவட்ட குழு.

தயாரிப்பு:
சவுத் ஏசியன் புக்ஸ்,
சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை இதுதான்

வீ. எம். குகராஜா

இந்த வீடியோ திரைப்படம் எண்பதுகளின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் "வீடியோ விஷன்" என்ற அமைப்பினூடாக தயாரிக்கப்பட்டது.


இதில் முன்னாள் வானொலி – நாடகத் தயாரிப்பாளர் கே.எம்.வாசகர் வீ. எம். குகராஜாவுடன் ஒத்துழைத்திருந்தார்.

கதை, வசனம், நெறியாள்கையை வீ.எம்.குகராஜாவே மேற்கொண்டிருந்தார்.

இசை, சற்குருநாதன் கவனித்தார்.

இதில் மேகலா, கலாலஷ்மி, பிரான்சிஸ் ஜெனம் ஆகிய பலர் நடித்துள்ளனர்.

வீடியோ விஷனின் முதலாவது படைப்பு "சிலந்தி வலை" ஆகும்.



அருணா செல்லத்துரையின் தயாரிப்பு, நெறியாள்கையில்

## வேழம்படுத்த வீராங்கனை

முல்லைமோடி வட்டக்களரி நாட்டுக்கூத்து.

மதங்கொண்ட கொம்பன் யானையை மடக்கிப்பிடித்த வீரமங்கையின் சரிதம் இது. பிரதியாக்கம் தமிழ்மணி. அரியான் பொய்கை கை. செல்லத்துரை.



பங்கு பற்றுவோர்:
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்.

படப்பிடிப்பு : ராம்சம் வீடியோ.

தொடர்புகள் : **AVA (Pvt) Ltd.**

## பாப்பா – பாரதி
### பாகம் – 1

## PAPAA - BHARATHI
## PART - I




இந்த வீடியோ, குழந்தைகளுக்காக மலர்கிறது. இதில் இனிமையான பாடல்கள், கதைகள், நாடகங்கள் ஆகியன உள்ளன. குழந்தைகள் இவற்றை மீண்டும் மீண்டும் பார்ப்பதில் மகிழ்ச்சி காண்பர். பாடல்களைப் பாடுவர். கதைகளைச் சொல்வர். பாத்திரங்களைப் பாவனை செய்வர். இதில் அவர்கள் குதூகலம் பெறுவர்.

இந்த வீடியோ, குழந்தைகளின் தமிழ் மொழி ஆர்வத்தைத் தூண்டும். மொழித் திறனை வளர்க்கும். கற்பனையை விருத்தி செய்யும்.

தயாரிப்பு: பாரதி பள்ளி.
BHARATHI - ACADEMY.
P.O. BOX. 1357,
Clayton South.
Victoria 3169
Australia.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்

இமயவரம்பன்

பதிப்பு : ஜூன் 1988. ரூபா : 24.00

மறுபதிப்பு : ஜீலை1995.




இந்நூலில் மூன்று கட்டுரைகளும், இரண்டு பின் இணைப்புகளும் இடம் பெறுகின்றன. இக்கட்டுரைகள் செம்பதாகை, புதிய பூமி ஆகியவற்றில் வெளிவந்தவையாகும்.

1983-இன வன்செயல் இடம் பெறுவதற்கு சற்று முன்னதாக, "இன உறவுகள் பற்றி" என்ற ஆய்வும் பேரின வன்செயலின் பின் "இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்" என்ற ஆய்வும் எழுதப்பட்டவையாகும். "சமாதானமும் ஒப்பந்தமும்" இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகும்.

அன்று போல் இன்றும் மாக்ஸிய லெனினியவாதிகள் மட்டுமே சகல தேசிய இன மக்களது நலன் சார்ந்த தீர்வுகளை நாடுகிறார்கள். அவர்களே துணிந்து அக்கருத்துக்களை மக்கள் முன் வைக்கிறார்கள். இந்த வழிகாட்டலின்றி இலங்கையின் எந்தத் தேசிய இனத்தினதும் விடுதலைக்கு மார்க்கம் இல்லை என்பது தெளிவாகிறது. எனவே விடுதலைப் போராட்டத்தின் சுலோகம் ஜனநாயகம் - மனித உரிமை, தேசிய சுயநிர்ணயம் ஆகும். இதுவே சகல முற்போக்கு - போராட்ட சக்திகளையும் ஐக்கியப்படுத்திச் சமாதானத்துக்காகவும் சமத்துவத்திற்காகவும் சுதந்திரத்துக்காகவும் சுபீட்சத்திற்காகவும் முன் நடத்த வல்ல மந்திர வார்த்தை.

## மலையக மக்களும் எதிர்காலமும்




பதிப்பு : ஜனவரி 1992. ரூபா : 5.00

இன்றைய சூழலில் நாடும் மக்களும் எதிர்நோக்கி நிற்கும் பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் மலையக மக்களின் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான அரசியல் மார்க்கத்தினையும் இந்நூலில் அறிக்கையிடப்படுகின்றது.

## சர்வதேச அரசியல் நிகழ்வுகள்பற்றி 1979 –1982




க. கைலாசபதி

பதிப்பு : டிசம்பர் 1992. ரூபா : 30.00

அநேகமாக மக்கள் சர்வதேச விவகாரங்களில் அக்கறை கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அதனைப் பற்றிய உறுதியான தரவுகளையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான ஆய்வுகளையோ பெறுவதற்கு ஒரு போதும் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டுவதில்லை. செய்தித்துறையில் காலமும் பத்திரிகைத்துறையில் இடமும் வரையறைக்குட்பட்டதாக இருந்த போதிலும் பாரிய உலகளாவிய செய்தி ஸ்தாபனங்கள் உலகச் செய்திகளை வாசகர்களுக்கு வழங்குவதில் கட்டுப் படுத்தலும் சுயசெல்வாக்கிற்கு உட் படுத்தலும் செய்வதனால் பெரும்பாலான முக்கிய செய்திகளைப் பற்றி பல அறிவுசால் பெருமக்களும் கூட மேலோட்டமான கருத்துக்களையே பெறுகின்றனர்.

மேலாதிக்க வல்லரசுகள் தங்களுடைய பிரச்சாரப் பீரங்கி வீச்சுக்களை நடத்துகிறார்கள். இதனால் அடிக்கடி பிரச்சினைகள் மறைக்கப்பட்டு விடுகின்றன. திரிபுபடுத்தப்பட்டவை உண்மைகளாக மாறுகின்றன. பிழை ஆனவை புனிதமான உண்மைகளாக நிலை நிறுத்தப்படுகின்றன. இதில் உள்ள ஆளுமைச் சக்திகள் பெரும்பாலான செய்திகளை உருவாக்கி நெறிப் படுத்துகின்றன. இவர்கள் இவ்வாறு செய்வதன் மூலம் உலக விவகாரங்களில் ஒரு பக்கப் போக்குப் பாணியை ஏற்றுக் கொள்ளத் தூண்டுதல் செய்கின்றனர். இது உலகின் அனைத்து மக்களினதும் நலன்களுக்கு எதிரானதாகும்.

– க. கைலாசபதி

1979–1982 காலப்பகுதியில் கைலாஸ் செம்பதாகை, றெட்பனர் ஆகிய பத்திரிகைகளுக்கு எழுதிய சர்வதேச அரசியல் நிகழ்வுகள் பற்றிய விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும்.



## தேசிய ஜனநாயகமும் சுய நிர்ணய உரிமையும்

இமயவரம்பன்

பதிப்பு : ஜனவரி 1992. ரூபா : 5.00




தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பது என்ற திசை மார்க்கத்தில் அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளும் உள்ளடங்கியுள்ள தேசிய ஜனநாயகத்தின் அம்சங்களையும் சுயநிர்ணய உரிமையின் தாற்பரியத்தினையும் மக்கள் மத்தியில் விளக்கும் பன்முக நடவடிக்கைகளில் ஓர் அம்சமாகவே இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது.

## சீனாவின் ஜனநாயகமும் எதிர் காலமும்

பிரான்சின் கைசோர்மன்
இத்தாலியின் பார்பரோ அலிகீரோ
ஜப்பானின் யாபுக்கி சுசுமு
ஆகியோர்
சீனாவின் கல்வியாளர்
ஹூ சின்னுடன்
உரையாடல்.





பதிப்பு : ஒக்ரோபர் 1992. ரூபாய் : 22.00

"சீனாவின் ஜனநாயகமும் எதிர் காலமும்" என்னும் தலைப்பில் வெளிவந்த நேர்காணல். அதே தலைப்பில் மொழி பெயர்க்கப்பட்டு இந்நூலில் இடம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசியலில் ஜனநாயகம் என்பது சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படாத பொழுது, பொருளியலில் சுதந்திரமான சந்தைப் பொருளாதாரம்' பற்றிப் பேசுவது அபத்தமானதும் ஆபத்தானதுமாகும்." என்ற அடிப்படையில் இந்நூல பல உண்மைகளை தமிழ் வாசகர்கள் முன் வைக்கின்றது.




## க்ருஷ்ச்சொவ் முதல் கொர்பச்சொவ் வரை

**தேசபக்தன்**

பதிப்பு : ஏப்ரல் 1992.  ரூபா : 10.00

1991ம் ஆண்டில் சோவியத் யூனியன் இறந்து விட்டது. அதற்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்னதாக கிழக்கு ஐரோப்பாவில் சோசலிசம் முடிவுக்கு வந்துவிட்டது. இந்நிகழ்வுகளை ஆதாரம் காட்டி சோசலிசம் செத்து விட்டதாகவும் கம்யூனிசம், கல்லறைக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் மார்க்சியம் காலாவதி ஆகிவிட்டது எனவும் உலகின் சகல வகைப் பிற்போக்கு சக்திகளும் பெரும் குரல் வைத்து வருகின்றன.

சோவியத் யூனியனில் கிழக்கு ஐரோப்பாவில் நடந்தேறிய சோசலிச விரோதச் செயல்களும், இறுதி நிகழ்வுகளும் மார்க்சியத்தின் போதாமையினாலோ அன்றி லெனினியத்தின் நடைமுறை இயலாமையினாலோ இடம் பெற்றவை அல்ல என்பது முழுமையில் புரிந்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.



இலங்கையில் குறிப்பிடத்தக்க மார்க்சிய லெனினிய ஆய்வாளராக வுள்ள "தேசபக்தன்", நடைமுறையில் மார்க்சிய – லெனினிய இயக்கம் பலமுனைகளிலும் வலிமை பெற வேண்டுமென்ற நோக்கத்தை தன் ஆய்வுக் கட்டுரைகளின் மையமாகக் கொண்டுள்ளார்.

## சு.வே. சீனிவாசகம் நினைவுச் சுவடுகள்

**1909 – 1992**




முதற்பதிப்பு : ஜனவரி 1993. ரூபா : 17.00

மனித நேயத்தையும் தொண்டினையும் வர்க்கப் போராட்ட அரசியல் நோக்கின் ஊடே வரித்து நின்று, அடிப்படை சமூக மாற்றம் ஒன்றே இன்றைய சகல அவலங்களையும் மாற்றி அமைப்பதற்கான இறுதி மார்க்கம் என்பதனை வலியுறுத்தி தனது வாழ்நாளினை அதற்காக அர்ப்பணித்து வாழ்ந்த தோழர். சு.வே. சீனிவாசகம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளின் ஓர் பகுதியே இந்நூலாகும்.

அவரது வாழ்வு ஆயுள் வேத வைத்தியமாகவும் – அரசியல் ஊழியமாகவும் – பொது நலத் தொண்டாகவும் அமைந்திருந்தது.

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கண்காட்சியில் ஆயுள்வேத மூலிகைகள் பகுதியின் அமைப்பாளராகவும் செயற்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் வடபுலத்தின் இடது சாரி இயக்க முன்னோடிகளில் ஒருவரது வாழ்க்கை குறிப்பு இன்றைய இளைஞர் களுக்கும் ஆய்வாளருக்கும் பல விபரங்களைத் தருவதாக அமைந்துள்ளது.




## புதிய ஜனநாயகமும் போராட்ட மார்க்கமும்

*சி.கா. செந்திவேல்*

பதிப்பு : ஏப்ரல் 1993. ரூபா : 12.00

மூன்றாம் உலக நாடுகள் பல்வேறு பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கி நிற்கின்றன. ஏகாதிபத்திய சக்திகள் இந்நாடுகளை நவ கொலனித்துவ அமைப்பு முறைக்குள் அழுத்தி அரசியல்- பொருளாதார-கலாச்சார ரீதியில் ஊடுரு வலை நிகழ்த்துகின்றன.

இலங்கையும் இந்நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. ஜனநாயக -மனித உரிமைகளை மீண்டெடுக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை தேசிய இனப் பிரச்சினை சார்பான போராட்டம் யுத்த வடிவத்தைப் பெற்று நீடிக்கின்றது. அதனை முடிவுக்குக் கொண்டு வர சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்க வேண்டியது தவிர்க்க முடியாத கடமையாகிறது. இக்குறிக்கோளை மையமாக வைத்து புதிய-ஜனநாயகம் பற்றியும் அதனை வென்றெடுப் பதற்கான தூர நோக்கு வழிமுறைகள் பற்றியும் தோழர். சி.கா. செந்திவேல் எழுதியுள்ளார்.



## கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோழர் சண்முகதாசன்

(விமர்சனக் கண்ணோட்டம்)

*வெகுஜனன், இமயவரம்பன்.*





பதிப்பு: மார்ச் 1994. ரூபா:6.00

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கப் பரப்பில் ஒரு முக்கியமான அரசியல் தொழிற் சங்கத் தலைவராகத் திகழ்ந்தவர் மறைந்த தோழர் நா. சண்முகதாசன். தனது 74வது வயதில் மரணமடைந்த தோழர் சண் ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை அரசியல் தொழிற்சங்க இயக்கத்தின் முழுநேர வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தவர்.

ஆரம்ப காலத்தில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டபின் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒரு முழுநேர ஊழியராக இணைந்து கொண்டவர். பிற்காலத்தில் மார்க்சிய – லெனினிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வந்தவர். அதனால் அவரது தலைமைத்துவத்தின் பங்களிப்பும் சாதனைகளும் குறைபாடுகளும் பல கோணங்களில் இருந்தும் நோக்கப் பட்டது.

அவரது தலைமைத்துவத்தால் சாதக மானவைகளும் பாரிய தவறுகளும் இழைக்கப்பட்டன. அவை இன்று மார்க்சிய – லெனினிய விமர்சனப் பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒரு கம்யூனிஸ்டின் உருவாக்கம்

எட்ஹார்ஸ்னோ
தமிழில் : எஸ். இந்திரன்

முதற்பதிப்பு: பெப்ரவரி 1994. ரூபா: 18.00

மேற்கில் தோற்றம் பெற்று ரஷியப் புரட்சியின் ஊடாக கிழக்கு உலகிற்குள் புகுந்த மார்க்சிச லெனினிசத்தைக் கையேற்றுப் பாதுகாத்து அதனைச் சீனநாட்டின் விசேஷ நிலைமைகளுக்கேற்ப பிரயோகித்து வெற்றி கண்ட நடைமுறையின் மூலம் "மேலைக் காற்றை கீழைக் காற்று மேவி நிற்கும்" நிலைக்கு உந்து விசை கொடுத்தவர் தோழர் மாஓ. சேதுங் ஆவார்.

அத்தகைய மாமேதையின் நூற்றாண்டு நினை(1893–1993)வாகவே இந்நூல் வெளிவந்துள்ளது. எட்ஹார்ஸ்னோ என்ற முப்பது வயதுடைய அமெரிக்கப் பத்திரிகையாளர் 1937ம் ஆண்டில் மாஓவையும் ஏனைய சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களையும் சந்தித்துச் சேகரித்த தகவல்களை ஒன்றுதிரட்டி "சீனாவின் மீது செந்தாரகை" என்னும் நூலினை எட்கார் வெளியிட்டார்.

இத்தகைய முக்கியத்துவம் மிக்க நூலின் நான்காவது அத்தியாயமாக அமைந்துள்ள ஒரு கம்யூனிஸ்டின் உருவாக்கம் என்ற பகுதியே தமிழாக்கம் செய்யப்பட்டு இந்நூல் உருவம் பெறுகின்றது.

ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குச் சக்திகளும் கம்யூனிஸ்டுகளைப் "பயங்கரவாதிகள்", "பலாத்காரவாதிகள்", "இரத்த வெறி பிடித்தவர்கள்" என்று காட்டி நின்ற வேளையில் அதனை முறியடிக்கும் ஒரு நேரடிச் சாட்சியாக ஸ்நோவின் கட்டுரைகள் அமைந்தன.

## சுயநிர்ணய உரிமையில் முஸ்லிம்கள் மலையக மக்கள்

இமயவரம்பன்

பதிப்பு: மார்ச் 1994. ரூபா.8.00

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தங்களாக கூர்மையடைந்து வந்துள்ள தேசிய இனப் பிரச்சினையானது இன்று எரிந்து கொண்டிருக்கும் ஒன்றாகி நிற்கிறது. இப்பிரச்சினையின் மத்தியில் சுயநிர்ணய உரிமை, பிரிந்து செல்லுதல், தேசியவாதம் பற்றிய விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன.

இச்சூழலிலேயே மார்க்சிய அடிப்படையில் சமகால நோக்கில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் முன் வைக்கப்படும் கருத்துக்கள். மேலும் விவாதங்களைக் கிளப்பக்கூடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாக்ஸியம் – சில கேள்விகள்




இமயவரம்பன்

பதிப்பு: ஜூலை 1995. ரூபா:12.00.

மாக்ஸியம் என்பது சமூக மாற்றத்துக்கான சமூக விஞ்ஞான அணுகு முறையை வழங்கும் உலகக் கண்ணோட்டமாக நாம் தொடர்ந்து ஏற்றுக் கொள்வதும் பிரயோகிப்பதும் அவசியம்தானா ?

மாக்ஸிய மெஞ்ஞானம் என்பது தனிமனித ஆளுமையை – சமூக, சிந்தனையை – சமூக மாற்றத்தை விருத்தி பண்ணும் சக்தியை எங்கிருந்து பெற்றுக் கொள்கிறது ? இவற்றுக்கான தத்துவத் தேடலாக – நடைமுறையிலான உண்மைகள் – முரண்பாடுகள் இக்கேள்விகளினூடாக ஆராயப்படுகின்றன.

➤➤➤➤ ● ◀◀◀◀



## தேசியம்
## அன்றும் – இன்றும்

இமயவரம்பன்.

பதிப்பு – ஜூலை 1995 ரூபா: 16.00

இந்நூலில் ஆறு அத்தியாயங்கள் உள்ளன.

1. தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
2. மாக்ஸியமும் தேசியமும்.
3. தேசியவாதத்தின் நெருக்கடி.
4. தேசியமும் ஏகாதிபத்தியமும்.
5. இலங்கையின் தேசியப் பிரச்சினையும் இடது சாரிகளும்.
6. தேசியமும் அமைப்பியல் வாதக் கரடியும்.



இப்பொழுது மாக்ஸியத்தை விமர்சிப்பது நடைமுறையினின்று பூரணமாகவே ஒதுங்கிவிட்ட சில புத்தி ஜீவிகளுக்கு விருப்பமான பொழுது போக்காக உள்ளது. தமிழகத்தில் இத்தகையோரின் எண்ணிக்கை சிறு அளவில் காணப்படுகிறது. ஈழத்தமிழர் விடுதலை இயக்கங்களிலிருந்து விரக்தியுற்றோர் வேறு காரணங்களாலோ ஒதுங்கித், தம்மைப் புத்தி ஜீவிகளாகக் காட்டிக் கொள்வோரிடமும் இந்தப் பண்பைக் காணலாம். மாக்ஸிய நடைமுறையில் ஏற்பட்ட தவறுகளை அவற்றின் ஸ்தூலமான நிலவரங்களின் அடிப்படையிலும் மாக்ஸியத்தை ஒரு இயக்கம் எவ்வாறு புரிந்து கொள்கிறது என்ற அடிப்படையிலும் மதிப்பிட வேண்டும் என்ற ஆவல் இவர்கட்கு இருப்பதில்லை.

அமைப்பியல்வாத வெளிச்சம் போடுகிறவர்கள் தமது அணுகுமுறையை மேலும் தெளிவாக முன்வைப்பதோடு தமது முடிவுகளை யதார்த்தத்துடன் ஒப்பிட்டுப் பழகுவது நல்லது. தமது அகச்சார்பையும் முற்கற்பிதங்களையும் மழுப்பி நியாயப் படுத்துவதற்கு ஏதாவது ஒரு புதிய கோட்பாட்டையோ ஆய்வு முறையையோ பயன்படுத்திச் சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். அந்தளவில் அவர்களுக்கு வெற்றிதான்.

➤➤➤➤ ● ◀◀◀◀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்

வெகுஜனன் – இராவணா

முதற்பதிப்பு : 1988.
இரண்டாம் பதிப்பு : 1995.

இந்தியப் பகுதிகளிலே சாதியம் என்பது கொடூரமான ஒடுக்குமுறை வடிவமாக இருந்து வந்துள்ளது. ஈழத்தில் காணப்படும் சாதியம் இந்திய வடிவத்திலிருந்து சிற்சில அம்சங்களில் வேறுபட்டிருப்பினும் அடிப்படையில் மனிதநேயமற்ற ஒடுக்குமுறையாகத் திகழ்ந்து வந்துள்ளமை வரலாற்று வழியாகக் கண்டு கொள்ள முடியும். குறிப்பாக ஈழத் தமிழர்களிடையே ஆழ வேர் பாச்சி நிற்கும் இச்சாதியத்தை அதன் வரலாற்றுப் பின்னனியில் வைத்து இந்நூல் ஆய்வு செய்கின்றது. அத்துடன் வெறுமனே வரலாற்று ஆய்வு என்பதுடன் மட்டும் தன்னை நிறுத்திக் கொள்ளவில்லை. மேலும் இச்சாதியத்திற்கு எதிரான தாழ்த்தப்பட்ட மக்களின். அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலான போராட்டங்களின் வளர்ச்சியையும் வரிசைபடுத்திக் காட்டுகின்றது. இந்நூலினை எழுதியுள்ள வெகுஜனன்– இராவணா ஆகிய இருவரும் பொதுவுடமைவாதிகள் வர்க்கப் போராட்ட நோக்கில் சாதியத்தைப் பார்ப்பவர்கள். அது மட்டுமன்றி தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வோடும் போராட்டங்களோடும் தங்களை இறுகப் பிணைத்துக் கொண்டவர்கள். அந்த வகையில் இந்நூல் கனதியும் காத்திரமும் கொண்டதாகும். சாதியம், சாதிய நோக்கின் ஊடே அணுகப்படக் கூடாது. மாறாக வர்க்கப் போராட்டப் பார்வையின் மூலம் நோக்குவதற்குரியதொன்று என்பதனை நடைமுறை அனுபவத்தின் ஊடாக இந்நூல் எடுத்து விளக்கிச் செல்கிறது. அந்த வகையில் இந்நூல் இன்றைய சூழலில் ஓர் அவசியமான ஆய்வு நூலாகி நிற்கின்றது.

## இலங்கை இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகள்




சி.கா. செந்திவேல்

பதிப்பு:– ஜூலை 1995. ரூபா: 45.00

இலங்கையில் இடதுசாரி இயக்கம் என்பது பலவேறு நிலைகளில் இயங்கிவரும் மார்க்சிச, லெனினிச, மாஓசேதுங் சிந்தனை வகைப்பட்ட கருத்துக்களைக் கொண்ட கட்சிகள், இயங்கங்கள், குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதொன்றாகும். இவ்விடதுசாரி இயக்கம் பற்றி விரிவாக அறிந்து கொள்வதற்கு மேற்படி நூல் ஓர் தகுந்த ஆவணமாகின்றது. அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட இலங்கையின் இடதுசாரி இயக்கம் பயணித்து வந்த பாதையில் ஏற்பட்ட சாதக பாதகங்களையும், ஏற்ற இறக்கங்களையும் இந்நூல் ஓர் மார்க்சிச நோக்கிலான மதிப்பீட்டிற்கு உள்ளாக்கிக் கொள்கிறது. இதன் ஆசிரியர். தோழர். சி.கா. செந்திவேல் இடதுசாரி இயக்கத்தில் பொதுவுடைமை வாதியாக கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் முழுநேரப் பணிபுரிந்து வருபவர். அவரது அரசியல் அனுபவங்களின் ஊடே எழுதப்பட்டுள்ளதால் இந்நூல் சிறப்புதன்மையினைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றது. இடதுசாரி இயக்கத்தை எதிர்ப்பவர்கள் சிலர் எழுதியுள்ளவற்றில் விரோதமே முன் நிற்கின்றன. ஆதரித்து எழுதியவர்களின் எழுத்துக்களில் மிகைப் படுத்தப்பட்ட நற்புகழ்ச்சிகளே காணப் படுகின்றன. ஆனால் இந்நூலிலே இவை இரண்டிற்கும் பதிலாக உண்மைகளும் நேர்மையான நோக்கும் காணப் படுவதுடன் எதிர்கால நம்பிக்கை யினையும் வழங்குகின்றது. அரசியல் ஆர்வம் மிக்க அனைவரும் இந்நூலினைப் படிப்பது பயன் உள்ளது.

## தோழர் மணியம் நினைவு மலர்

பதிப்பு:- டிசம்பர் 1989 ரூபா:20.00

இலங்கையில் பொதுவுடைமை இயக் கத்தின் வளர்ச்சிக்கு தமது • வாழ் நாளினை அர்ப்பணித்துச் சென்றவர் களின் வரிசையில் முதன்மை இடத் தைப் பிடித்து நின்றவர் காலம் சென்ற தோழர் கே.ஏ. சுப்பிரமணியம். மணியம் தோழர் என்று பரிவோடும் பாசத்தோடும் தோழர்களால் அழைக்கப்பட்ட அவர் தனது சொல்லாலும் செயலாலும் ஒரு பொதுவுடைமை வாதிக்குரிய வாழ்க்கை வாழ்ந்து முன் மாதிரி வழங்கிச் சென்றவர். அவர் தேசத்தையும் மக்களையும் இறுதி மூச்சு வரை நேசித்துச் சென்றவர். கட்சிக்கும் மக்களுக்கும் எதிராக நெருக்கடிகள், சோதனைகள், சவால்கள் அடக்குமுறைகள் வந்த வேளைகளில் எல்லாம் துணிவுடன், நிதானத்துடன் தந்திரோபாய செயற்பாட்டுடன் தலைமைத்துவத்தை வழங்கி முன் னோக்கிச் செல்ல வழிகாட்டியவர்.



அத்தகைய பண்புகளைக் கொண்ட தோழர் மணியம் 1989ல் நம்மை விட்டு மறைந்து விட்டார். அவரது நினைவாக வெளிவந்த நூலே தோழர் மணியம் நினைவு மலராகும். ஒரு நேர்மையான பொதுவுடைமை வாதியைப் பற்றி ஏனையோர் பதிவு செய்து வைத்திருந்த எண்ணங்களை இந்நூலிலே காண முடியும். இது ஓர் காட்சிய ஆவணம் என்றும் கூறலாம்.

## மலையக மக்கள் என்போர் யார்?

இ. தம்பையா



பதிப்பு: ஜூலை 1995. ரூபா: 16.00

இலங்கையில் வாழும் எல்லா சமூகங் களையும் விட மிகவும் பின்தங்கிய நிலைமையிலேயே மலையக மக்கள் வாழ்கின்றனர். மலையக மக்கள் மீதான பேரினவாத அடக்குமுறைகள் அவற் றுக்கு எதிரான அம்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் போன்றன பற்றி எடுத்துரைக்கும் கட்டுரைகளை தாங்கி வெளிவந்துள்ளது இந்நூல். ஒரு வித்தியா சமான, புதியதொரு அணுகுமுறையை கையாள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. மலையக மக்களின் அரசியல் பரிணாமத்தை சரியாக விளங்கிக் கொள்ள உதவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமூக மாற்றத்துக்கான அரங்கு

**க. சிதம்பரநாதன்**

**முதற் பதிப்பு: 1994. ரூபாய்: 18.00**

விஞ்ஞானப் பட்டதாரியான இந்நூலாசிரியர், மௌனகுருவினால் உந்தப் பெற்று, சண்முகலிங்கத்தால் செம்மைப் படுத்தப்பட்டு, ஆசிய நாடக இயக்கம் ஒன்றின் தொடர்பால் விசாலிக்கப் பெற்று, சமகாலச் சர்வதேசிய அரங்கின் அரசியல், சமூக-மாற்று நடைமுறைகளால் வசீகரிக்கப்பட்டுள்ளவர்.

நாடகத்தின் மூலம் ஒடுக்கப்பட்டுள்ள மக்களுக்குக் கலை விடுதலை அளிக்கலாம் என்ற சர்வதேசியக் கொள்கைக்குப் பரிச்சயமாகி, அக்கொள்கை சம்பந்தப்பட்ட ஓர் இயக்கத்தின் நடவடிக்கைகளோடு தொடர்பு கொண்டதும் அந்த முறைமையை நமது அரங்கப் பண்பாட்டினுள் கொண்டு வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார்.

மக்கள் போராட்டத்தில் பண்பாடு மிக முக்கிய பங்கை வகிக்கிறது. மானுட நேயம்மிக்க ஒரு பண்பாடு நிலவாத ஒரு சமூகத்தில் மானுட விடுதலைக்கான போராட்டம் அதன் முழு வீச்சை அடைய முடியாது. மானுடப் பண்பற்றதாகிவிட்ட நமது ஒடுக்குமுறைப் பண்பாட்டை மானுடப்படுத்துகின்ற பணியை ஊக்குவிக்கும் ஒரு கருவியாக அரங்கைப் பயன்படுத்த முடியுமா என்ற சிந்திப்பின் விளைவே "சமூக மாற்றத்துக்கான அரங்கு" என்கிற இந்நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org